

பல்கலைப்புலவர்
திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்
எம்.ஏ., எம்.எல்.



நெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமி
நெல்வேலி சென்

கழக வெளியீடு ௫௦௪

மெய்கண்டதேவர்

அருளிய

சிவஞானபோதம்

பொழிப்புரை



பேராசிரியர்

கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

எம். ஏ., எம். எல்.



திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்


திருநெல்வேலி :: சென்னை.

First Edition : Dec., 1949.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS 1

Head Office :
24, EAST CAR STREET, THIRUNELVELI.



அப்பர் அச்சகம், சென்னை 1.

பதிப்புரை

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ" —தாயுமானவர்.

செந்நெறியாம் சிவன் நெறிக்கு இருகண்போல் திகழ்வன திருமுறை பன்னிரண்டும், மெய்கண்ட நூல் பதினான்கும் ஆகும். திருமுறையைப் புகழ்நூல் (தோத்திரம்) எனவும், மெய்கண்ட நூலைப் பொருள்நூல் (சாத்திரம்) எனவும் வழங்குப.

மெய்கண்டார் ஏறத்தாழ எழுநூற்றைம்பது ஆண்டுகட்குமுன் அருள் தோற்றம் எய்திய வேளாண் செல்வர். வேளாண் மரபினர் உடம்பும் உயிரும் உடன் ஓம்பிப் பல்லுயிரும் பேணும் பண்பினர். அதனால், பிள்ளை (கடவுட் பிள்ளை) எனச் சிறப்புப்பெயருடன் வழங்கப் பெறுவர்.

இந்நூற்கள் முப்பொருள் உண்மையும் அப்பொருள்கள் ஒன்றோடொன்று இயைபுற்று இயங்கும் தன்மையும் யாவரும் உளங்கொண்டு உய்யுமாவண்ணம் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டுக்களுடன் அருளிச்செய்யப்பெற்றுள்ளன.

இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. இப் பன்னிரண்டு சூத்திரங்களும் முறையே திருமுறை பன்னிரண்டிற்கும் இலக்கணம் போன்று திகழ்வன. சூத்திரம், கருத்துரை, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு என்னும் ஐந்தும் மெய்கண்டாராலேயே அருளிச் செய்யப் பெற்றன. எடுத்துக்காட்டு எண்பத்தொரு வெண்பாக்களால் அருளிச் செய்யப்பெற்றது.

இந்நூற்கு மாதவச் சிவஞானமுனிவர் பல்லாற்றானும் பரந்துபட்டதோர் பேருரை வரைந்தருளினர். அவ்வுரை 'சிவஞானபாடியம்' என வழங்கும். அவற்றின் முழுப் பிழிவாக எளிய இனிய பொழிப்புரையாகப் பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். அவர்களால் இந்நூல் யாக்கப்பெற்றுள்ளது.

செந்நெறிச் செல்வரும் செந்தமிழ்ப் பெருமக்களும் இதனை வாங்கியும் வாங்குவித்தும் மெய்ப்பொருள் உண்மை தேறித் தமிழ்ப் பெருநெறி ஒழுகுவாராக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

சிவஞானபோதம்
- பொழிப்புரை -



பேராசிரியர்,
கா. சுப்பிரமணிய பிள்ளை,
எம்.ஏ , எம்.எல்.

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

சிறப்புப் பாயிரம்

-※-

நேரிசை யாசிரியப்பா

மலர்தலை உலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளின் கண்டுகண் இருள்தீர்ந்து
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முறைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற **மெய்கண்ட தேவன்**
பவம்நனி வன்பகை கடந்த
தவர்அடி புனைந்த தலைமை யோனே.

சிவஞானபோதப் பொழிப்புரை

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

உரை :—அருள் வடிவாகிய கல்லாலமர நிழலின்கண் எழுந்தருளியிருந்து, தம் மாணவர்க்கு மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர், மேன்மேலருள் செய்தற் பொருட்டு, சுயம்பு மூர்த்தியாகிய பிள்ளையாருடைய அறிவாற்றல், செயலாற்றல் என்ற இரண்டு திருவடிகளை மெய்யன்பர் தலைமேற்கொள்ளுவர்.

குறிப்பு :—கல்லாலமர நிழலின்கண் திருநந்திதேவர் முதலியோர்க்கு ஞானம் உபதேசித்தமை வெளிப்படை. 'அருளிய' என்பதற்கு அவர் அருளாற் பிறந்த என்பாருமுளர். இங்கே, அருளிய = அருள்செய்ய. பொல்லார் = பொள்ளார், உளி முதலியவற்றாற் போழ்ந்து செய்யப்படாதவர். திருவெண்ணெய்நல்லூரிலே, விநாயகப்பெருமான் சுயம்புமூர்த்தியாயுள்ளார். புனைதல் = மேற்கொண்டு தமது அறிவு செயல் அவற்றுள் அடங்கப்பெற்று நிற்றல்.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்உணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
உணராார் உணராார் உடங்(கு) இயைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

உரை :—(உடைமைப் பொருளாகிய) தம்மியல்பினை உணர்ந்து தம்மை உடையனாகிய தலைவனை உணர்ந்தவர்கள், தமக்கு உடைமையாக எம்மை உடையவர்களாதலின், எம்மை (அன்பாற் பாராட்டுவாரன்றி) இகழமாட்டார். தம்மை உணராதவர்கள் தலைவனையும் உணராதவர்களே. அவர்கள் ஒருங்கு சேர்ந்து தம்முள் ஒற்றுமைப்பட மாட்டாராகலான், அவர்களது புறங்கூற்று மொழியை யாம் பொருளாகக் கொள்ளாம்.

குறிப்பு :—கேளாம்=உடன்படுக்கொள்ள மாட்டோம்.

முதற் சூத்திரம்

அவன் அவள் அது வெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்(து) உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

என்பது சூத்திரம். என்னுதலிற்றோவெனின், சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாக வுடைத்து, இவ்வுலகம் என்பதுணர்த்துதல் நுதலிற்று.

முதற்சூத்திரப் பொருள் —அவன், அவள், அது என்று பகுக்கப்படும் உலகத் தொகுதி, (தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் ஆகிய) மூன்று தொழிலுடைமையால், அது ஒருவனாற்றோற்றுவிக்கப்பட்டு, நிலைபெறுவதேயாம். அது தான் ஒடுங்குதற்குக் காரணமான கடவுளாலேயே தோன்றுவது. ஆணவமலம் தீர்ந்து ஒடுங்காமையால், அது (ஒடுங்கியதோடு நில்லாது மீளவும்) உண்டாவது. அதற்கு (ஒடுக்கமாய் முடிவைச் செய்யும்) அந்தமாகிய கடவுளே ஆதியுமாகின்றான் எனத் தருக்க நூலறிந்தோர் கூறுவர்.

கருத்துப் பொருள் :— ஒடுங்குதற்குக் காரணமாயுள்ள முதற்கடவுளையே இவ்வுலகம் தனது தலைவனாக வுடையது.

குறிப்பு :—அவை = தொகுதி ; திதி = காக்கப்படுவது. ஒடுங்கி = ஒடுக்குங்கடவுள், ஒடுங்கியினால் உளதாம் என்பது. மலத்தால் = ஆணவமலம் உண்மையால், 'மலத்து' என்பதை 'ஒடுங்கி' யென்பதனோடு இயைத்து உயிர்களின் கருமமலம் பக்குவப்படுதற்பொருட்டு ஒடுங்கி (மீண்டும்) உளதாம் என்றுரைப்பதுமுண்டு. 'மலத்து' என்பதற்கு **மாயா மலத்து'** எனப் பொருள் கொண்டு, மாயையின் ஒடுங்கி அதனின்று மீளவும் உளதாம் என்பாருமுளர்.

கருத்துக் குறிப்பு:—சங்கார காரணன் என்று மாத்திரங் கூறாது, சங்கார காரணனாயுள்ள முதலை என்றது, உலகத்தின் பல பகுதிகளைத் தனித்தனியே சங்காரஞ் செய்வார் பல கடவுளர் இருத்தலின், எல்லாவற்றையும் ஒடுக்குபவனே முதல்வன் என்பார் அவ்வாறு கூறினர்.

முதற்சூத்திர முதல் அதிகரணம்

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து.

பொருள் :—(முதற்கண்) நிலைபேறுடையதாய், ஆண், பெண், இரண்டுமல்லாதது என்ற அவயவப் பகுப்புடையதாய்ச் சுட்டி யறியப்படும் உலகம் தோற்றம், நிலை, முடிவு என்பவற்றையுடையது.

குறிப்பு:—அவயவப்பகுப்பு என்பது கலப்புப் பொருளிற்சேர்ந்துள்ள தனிப்பொருட் பிரிவுகள். உலகமானது, நிலம், கடல், மலை முதலிய அவயவப் பகுப்புக்களையுடையது. மண்ணின் ஒரு துண்டு, அதன் அவயவப்பகுப் பாகாது. ஒரு பொற்கட்டியில் வெட்டிய சிறு துண்டை

அதன் அவயவப்பகுப்பு என்பதில்லை. சுட்டப்படாத பொருளைப்பற்றி யாதுங் கூறமுடியாது. சுட்டியறியப்படும் பொருளே, முத்தொழிலுடையது.

ஏது.—தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

பொருள் :—நிலை பெறுவதாய்க் காணப்படும் உலகின் கண்ணே, படைப்பும், முடிவும் உடன் நிகழ்தலின்.

குறிப்பு :—நிலைபெற்றிருக்கும் உலகத்திலேயே ஒரு பொருள் தோன்றியழிதல் அவை உடன் நிகழ்தலென அறிக. நிலைபெறுவதற்கு முதலில் தோற்றம் வேண்டும். ஒடுங்கிநிலைன்றித் தோற்றம் நிகழாமையின் ஒடுக்கமும் வேண்டும். ஆதலால், நிலைபேறு, 'ஈறு முதலுந் துணையாகி நிகழும்' என்றார்.

உதாரணம் :

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாதும் பெற்றிமையின்—ஓதாரோ
ஒன்(று) ஒன்றிற் றேன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றுஎன்றும் உண்டென்ன ஆய்ந்து.

பொருள் :—பேதையே அல்லது பெண்ணே! பூதம் ஆதியாகவுள்ள உலகிற்கு, படைப்பும் முடிவும் துணைக் காரணமாகக்கொண்டே நிலைபேறு நிகழும். ஆதலின், ஒருவகைப்பொருள் ஒரு காலத்தில் ஒருங்கு தோன்றி நிலைபெற்று ஒருங்கே அழிவடையப் பார்த்திருந்தும், உலகிற்கும் எப்பொழுதாவது முற்றும் ஒடுங்கும் நிலைமை உண்டாமென ஆய்ந்தறிந்து அறிஞர் ஓதமாட்டாரா? (ஓதுவார் என அறிக.)

குறிப்பு:—இற = அழிய. பெற்றிமை = தன்மை. அன்று = முடிவுக்காலம். உலகிற்கு என்றும் அன்று உண்டென்ன ஆய்ந்து ஓதாரோ என முடிக்க.

இரண்டாம் அதிகரணம்

இனி, ஒடுங்கின சங்காரத்தினலல்லது உற்பத்தியில்லை யென்றது.

பொருள்—உலகம் ஒடுங்குவதற்குக் காரணமான சங்காரக் கடவுளினலல்லாமல் அதற்குத் தோற்றம் இல்லை. சங்காரம் = சங்காரக் கடவுள்.

ஏது.—இல்லதற்குத் தோற்றம் இன்மையின்.

பொருள்:—இல்லாதசொன்று எக்காலத்தும் தோன்றுவது இல்லை யாகலின்.

இலயித்த தன்னில் இலயித்த(து)ஆ(ம்) மலத்தால்
இலயித்த வாறுளதா வேண்டும்—இலயித்த(து)
அத்திதியில் என்னில் அழியா தவைஅழிவ(து)
அத்திதியும் ஆதியும்ஆம் அங்கு.

பொருள்:—எதன்கண் ஒடுங்கியதோ அதன்கணின்று ஒடுங்கியபொருள் மலம் (பரிபாகப்படுவது) காரணமாக, (மீள) உண்டாம். அஃது ஒடுங்கிய முறையே தோன்றவும் வேண்டும். உலகம் ஒடுங்கியது திதிக்கடவுளாகிய வாசுதேவனில் என்றுரைப்பின், (அக்கடவுள் வைகுந் தத்துவத்திற்கு) மேற்பட்ட தத்துவங்கள் அவனல் ஒடுங்காதவை. அவையும் ஒடுங்குவதுண்டு. அப்படி ஒடுங்குங்கால், அத்திதிககடவுளும், உலகப் படைப்பிற்குக் காரணமாய ஆதியெனப்படும் பிரமனும் அத்தத்துவங்களோடு ஒடுங்குவர்.

குறிப்பு:—இலயித்தது = ஒடுங்கியது. ஆம் = உண்டாம். அத்திதி = அப்பெற்றித்தாய திதிக்கடவுள். அழியாதவை = ஒடுங்காதவை. அழிவது = ஒடுங்குதல். ஆதி = பிரமா. அங்கு = ஒடுங்கும் அவ்விடத்தே.

ஏது.—உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின்.

பொருள்:—நிலைபெற்ற பொருளுக்குச் (செயல் நிகழவேண்டுமாயின்) செய்வோரில்லாது செயற்ருழில் நிகழாமையால்.

குறிப்பு:—மண் முதலியவற்றிற்குக் குயவனையின்றி வனைதல் முதலிய செயல் நிகழாமையறிக.

வித்துண்டா மூல(ம்) முளைத்தவா தாரகமாம்
அத்தன்றாள் நிற்றல் அவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து.

உரைநடை:—மண்(போற்) குளிர்ந்து என்பதை முதற் கண் கொள்க.

உரை:—நிலங்குளிர்ந்த விடத்து, வித்துண்டாக அதன் கணின்று முளை முளைத்தது போல, (மாயையும்) தனக்கு ஆதாரமாகிய இறைவனது சத்திவழி நின்று உருப்பட, அதன்கணின்று உயிர்களின் வினைக்கேற்ப உலக முதலியன தோற்றமெய்தும். குளவியா லிடப்பட்ட புழு, குளவியாதல் போல, வேண்டுவார் வேண்டிய உருவைக் கொடுத்து இறைவன் செய்வினைப்பயனைக் கூட்டுவானல்லவா?

குறிப்பு:—தாரகம் = ஆதாரம். தாள் = சத்தி, திருவடி, முயற்சி. நிற்றல் = நிற்றலால், நிற்பதாகிய மாயை யெனவுங் கூறுப. வித்தகமாம் = உருவுடையும். வேட்டுவன் = குளவி. குளவி, ஒரு புழுவைத் தன் கூட்டில் வைத்துக் கொட்ட, அப்புழு, குளவி வடிவடைதல் என்பது கருத்து. கூட்டானே = கூட்டுவான். 'மண்போல்' என்பதிற் 'போல்' அசை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்
தாக்காது நின்றுளத்திற் கண்டிறைவன்—ஆக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்(று) இன்றங் கட்டு.

உரைநடை:—இறைவன் அன்றே காலத்திற்றாக்காதே நின்று ஆக்காதே கண்டும் நோக்காது நோக்கி (நொடியாது)

கொடித்தும் இன்றாங்கட்டு உளத்திற் கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக் கண்டவனில் இற்று.

உரை:—கடவுள் அநாதியாகவே (கரணச் செயலுக் குரிய) காலதத்துவம்போலத் தொடக்குறாது நின்று, கரணத்தாற் படையாது எண்ணியவாறே படைத்தும், அவ்வாறே காவாது காத்தும், அழியாது அழித்தும், கட்டுப்படாதிருத்தல், நனவுள்ளபோது ஒருவன் தன் உள்ளத்தில் தான் கண்ட கனவையெண்ணுங்கால், அதனிற் றொடக்குறாதிருத்தலைப்போலு மித்தன்மைத்து.

குறிப்பு :—அன்றே = அநாதியே, காலத்தில் = காலத்தைப்போல, கண்டு = படைத்து, நோக்கி = காத்து, கொடித்து = ஒடுக்கி, இன்றும் = இல்லாததாகிய, கட்டு = கட்டில்லாமை, கண்டவனில் = கண்டவனைப்போல, இற்று = இத்தன்மைத்து.

மூன்றும் அதிகரணம்

இனி, சங்காரமே முதலென்றது.

பொருள்:—மேற்கூறிய காரணத்தால், சங்காரக் கடவுளே உலகிற்கு முதல்வன் என்றவாறு.

ஏது :—சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

பொருள் :—பொருள்களைச் சுட்டியறியும் இயல்பினவாகிய உயிர்த்தொகுதி, சுட்டியறியாது அறியுமியல்பொடு நின்ற சங்காரக் கடவுள் கட்டளைப்படி, நிற்றலன்றித் தம் வயமாய் நில்லாமையான்.

குறிப்பு :—சுட்டுணர்வு என்றமையால், பிரபஞ்சம் உயிர்த் தொகுதிகளைக் குறித்துநின்றது. சுதந்திரம் = தம் வயமுடைமை.

ஒன்றலா ஒன்றல் உளதாகி நின்றவா(று)
ஒன்றலா ஒன்றில்அவை யீறகல்—ஒன்றலா
ஈறே முதல்அதனின் ஈறலா ஒன்றுபல
வாறே தொடும்பாதம் அங்கு.

பொருள் —(உயிர் உலகம் என்பவற்றுள்) ஒன்று மாகாத ஒரு பரம்பொருளால், உயிர்கள உடம்பொடு தோன்றி நின்று, அந்த ஒன்றலா ஒரு பொருளாலேயே ஒடுங்குதலால், ஒன்றுமல்லாத முடிவான பொருளே வினை முதல் ஆகும். அதனைப்போல அழிவில்லாததாகிய உயிர் தானும் பலவாற்றானும், வீட்டிலேயும் அப்பரம்பொரு ளுக்கு அடிமையாவதே.

குறிப்பு :—ஒன்றலாவொன்று, ஒன்றலாவீறு என்பன இறைவனை யுணர்த்துப. அவை - உயிர்த்தொகுதி அங்கு= அங்கும்; முத்தியிலும்.

இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே ஆய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கும் அன்றே.

கருத்து.—புணருற்பவம் வருமாறுணர்த்துதல் நுதலிற்று

பொருள் :—இறைவன் கலப்பினால் உயிர்களேயாயும், தன்னியல்பால் தானேயாயும், உயிர்களுடன் நின்று அறிவித்தலால், உடனுமாய் நின்று, கட்டளை யென்ற தனது ஞானசத்தியால இருவினைப் பயனுக்கேற்ப இறத்தல் பிறத்தல்களை உயிர்கள் மேற்கொள்ளும்படி, அந்த ஞான சத்தியோடு பிரிவில்லாது நிற்பன்.

கருத்து :—மறுபிறவி வரும்வகை யுணர்த்துதல் கருதப்பட்டது.

குறிப்பு :—அவை =உயிர்கள், அவையேயாய்த் தானே யாய் அவையே தானேயாய் எனப் பிரித்திசைக்க. இரு வினை - நல்வினை தீவினை என்பன. போக்கு=இறத்தல். வரவு=பிறத்தல். புரிதல்=மேற்கொள்ளுதல்.

கருத்துக் குறிப்பு :—மறுபிறவியெனவே, அதற்கு முற்பட்ட இறப்புங் கூறப்பட்டதாம். இறப்புப் பிறப் பெனவே, இருவினைப்பயனுகர்ச்சி யனைத்துங் கூறப்பட்ட வாறு காண்க.

முதல் அதிகரணம்

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றனேயாய் நிற்கு மென்றது.

இவ்வதிகரணத்துள் உயிர்கள் எல்லாவற்றோடும் அத்துவிதமாய் முதல்வன் கலந்து நிற்பன் என்பது கூறப் பட்டது.

ஏது.—**அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏக மென்று சுட்டுவதுண்மையின், அத்துவித மென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு.**

பொருள் :—இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய் இருக்கிறான் என்று சொன்ன வளவிலேயே அச்சொல் இரண்டில்லாமை யென்று பொருள்பட்டு ஒருமையை யுணர்த்துமென்றால், ஒருமையைச் சுட்டி அறிவதாகிய பொருள் வேறாக இருத்தலால், அத்துவிதமென்ற சொல் (ஏகத்துவத்தை யுணர்த்தாமல்) இரண்டு பொருள்களின் அந்நியம் இன்மையை உணர்த்துவதாயிற்று.

குறிப்பு :—எண்ணுப் பெயர்மேல் வந்த அகரம் அன் மையை யுணர்த்துமாதலின், அத்துவிதம், இரண்டல்லாத

என்றே பொருள்படும். நாத்தி = நாஸ்தி, இன்மை. அந்நியம் = வேறுபாடு. ஆயிட்டு = ஆகலான்.

கட்டும் உறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்
இட்டதோரு பேரழைக்க என்னென்றங் த)—ஒட்டி
அவ ர்உளம்ஆ கில்லான் உளம்அவனு மாட்டா(து)
அவன்உளமாய் அல்லனுமாய் அங்கு.

பொருள் :—(நரம்பு முதலியவற்றாற் கட்டிய) உடம்பும் ஐம்பொறி முதலிய கருவிகளும் உடைய உயிர்க்கு இட்ட பெயரால் அழைத்தவுடன், அது ஏன் என்று பதில் விடுக்கும். அதற்குக் காரணம் உயிர் உடம்பிலே பேதமில்லாமற் கலந்திருப்பதே. அதுபோல, இறைவன் உயிர்களோடு வேற்றுமை தோன்றாதவாறு கலந்திருப்பன். ஆயினும், அவன் உயிராகமாட்டான்; உயிர்களும் அவனாக மாட்டா. ஆயினும், அவன் உயிராகியும், உயிரின் வேறாகியும் இருப்பன். உயிர் அப்படி நில்லாது.

குறிப்பு :—உறுப்பு, உடம்பிற்கு ஆகுபெயர். உள்ளம் = உயிர். ஆங்கு ஒட்டி = உயிரிற் பொருந்தியவன். 'ஒட்டி' பெயராகவுங் கொள்ளப்படும்; வினையெச்சமாகவுங் கொள்ளப்படும். அவன் = இறைவன்.

ஒன்(று) என்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்(று)என்ற நீபாசத தோடுளைகாண்—ஒன்றின்றல்
அக்கரங்க ளின்றாம் அகரவுயி ரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு.

உரை :—உபநிடத முதலியவற்றுள் ஒன்று என்றது ஒரு பொருளைக் குறித்தேயாம். அதன் கருத்து, கடவுள் ஒருவரேயென்பது. இதனை யறியாமல் ஒன்றென்று சொல்லுகின்ற நீ பாசத்தோடிருக்கின்றாய். ஆதலால் நீ பதியாகமாட்டாய். கடவுளையன்றி ஒன்றில்லை யென்றது, அகரவுயிரின் தொடர்பில்லாமல், பிற எழுத்துக்கள்

தோன்றுதல் இல்லையென்றாற்போல, இந்த முறைபற்றியே ஞான நூலொனது, பிரமமில்லையாயின், ஒரு பொருளும் இல்லை யென்றது.

குறிப்பு :—அகரவுயி ரென்பதற்கு நாதமென்பாரு முளர்.

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவித மாதல் அருமறைக ளொன்றென்று(து)
அத்துவித மென்றறையும் ஆங்கு.

உரை :—பண்ணில் ஓசை யடங்குவது போலவும், பழத்திலே சிறப்பாகக் கருதப்படுஞ் சுவை அடங்குவது போலவும், உலகெங்கும் வியாபகமாயிருக்கிற இறைவனது திருவருள் உயிர்களில் இரண்டறக் கலந்து நிற்பதால், அரிய மறைகள் ஒன்றென்று சொல்லாது அத்துவிதம் என்றியம்புவன.

குறிப்பு :—குணகுணி சம்பந்தம் போய் அத்துவிதக் கலப்பைக் கூறுவதால், அண்ணலுக்குஞ் சத்திக்கு முண்டான சம்பந்தங்கூறும் இவ்வெண்பா என்பாருமுளர். உடனாய்க் கலந்தமைச்சே அவை உவமையாயின

அரக்கோடு சேர்த்தி யணைத்தஅக் கற்போல்
உருக்கி யுடங்கியை ரது நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாம் தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று.

உரை :—சிவப்பு மெழுகோடு சேர்த்து அணைக்கப் பட்ட கற்பொடியானது உருகி யொருங்கு சேர்ந்து நின்றாற்போல, இறைவன் உயிர்களினின்று பிரிவிலனாக நிற்றலால், அவனே உலகமாய்த் தோற்றுவன். இம்முத்திக் காலத்தே, இறைவன் எனது அறிவின்கண் மன்னியபடி

யால், அவன் உலகமாதல் போல, அவனொடு கலந்து நானும் உலகமாயினேன் என்றியம்புவேன்.

குறிப்பு:—சிவச்சார்பு பற்றி, யானே உலகெலாம் ஆயினேன் என வாமதேவ முனிவர் முதலியோர் கூறினரென வுணர்க என்றது.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வருமென்றது.

பொருள்:—மேற்கூறியபடி, இறைவன் கலந்து நிற்கப் பெறும் உயிர்களுக்குப் பல பிறவிகளில் ஏட்டப்பட்ட புண்ணிய பாவங்கள், இறைவனது கட்டளைப்படியே உயிர்களின் நுகர்ச்சிக் குரியனவாம்.

ஏது.—ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கு அவை அவனதாக்கினை யாகலான்.

பொருள்:—ஓர் ஊரைக் காவல் செய்யும் அரசன் அவனது அதிகாரத்தை ஊர்காப்பாளரென்னும் அதிகாரிகளிடம் வைத்து அவர் வாயிலாக அதிகாரம் நடாத்துதல் போல, முதல்வனும் தனது கட்டளையை இருவினையிலே வைத்து அவற்றாற் பயன் நுகர்வித்தல் நிகழும் என அறிக.

> உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்
> உள்ளதா முற்செய்வினை யுள்ளவே—வள்ளலவன்
> செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
> செய்வன் செயல்அணையா சென்று.

உரை:—சஞ்சிதமாய் உள்ளதாகிய வினையே உடம்பைத் தோற்றுவிக்க, அந்த உடம்பில் உயிர் பொருந்தி வினைப்பயனை யனுபவிக்கும். முன்வினைப் பயனை அனுபவிக்கு முறையிலேயே வரும் பிறவிக்குரிய வினை ஏற்படும். கருணையாளனாகிய கடவுள், முயற்சியின் பயனை விளைக்கும்

நிலம்போல வினைசெய்வார்க்கு அவர் வினைப்பயனைக் கூட்டுவிப்பன். வினைப்பயன் தானே சென்று செய்தவனையடையாது.

குறிப்பு:—உள்ளது=சஞ்சிதம். தோற்ற மென்பதன் முன், உடம்பு என்பது தொக்குநின்றது. அடைவே= மேலைக்குரிய வினை.

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாஞ்சென்றங்(கு)
அவ்வினையைக் காந்த பசாசம்போல்—அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பா ராங்கு.

உரைநடை :—காந்தபசாசம்போல் அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் அவ்வினைஞர் அவ்வினையைச் செய்வதனில் அவ்வினையைச் சென்று நுகராரேல், ஆர் தாம் ஆங்கு அறிந்து அணைப்பார்.

உரை :—காந்தத்திற்கு நேராக இரும்பைப் பிடித்துக் காந்தத்தை அது பற்றச் செய்தல்போல, உயிர்களுக்குத் தவறாமல் வினைப்பயன்களை நுகர்விக்கும் முதல்வனால், வினைசெய்வோர் வினைசெய்தற்குரிய உடம்பினைப் போய்ப் பொருந்தி வினைப்பயனை நுகர்வாரல்லராயின், மலத்திற் கிடக்குங் கட்டுக்காலத்தில், வேறே எவர் வினைப்பயன்களை அறிந்து உயிர்களுக்குச் சேர்ப்பிப்பார்?

குறிப்பு:—அவ்வினை = முற்செய்யுளிற் பேசப்பட்ட வினை. ஆங்கு=கட்டுற்றிருக்குங் காலத்தே, உயிர்தாமே வினைப்பயன்களை யறியா; வினை சடம் ஆதலான், முதல்வனே வினைப்பயனை ஊட்டுவிப்பன் என்றவாறு.

நெல்லிற் றுமியும் நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்.

உரைநடை:—பொன்வாள் செய் வள்ளலாம் கமலத்து அலர் சோகம் ஆம்.

உரை :—பொன்னொளியைச் செய்கின்ற சூரியனால், தாமரையினிடத்தே விரிதலும் குவிதலு முண்டாம். (அது போல, முதல்வனால் மும்மலங்கள் தத்தஞ் செயல்களைச் செய்வன.) நெல்லினுக்கு உமியும் செம்பிலே களிம்பும், ஆராயுமிடத்து அவை இடையே புதிதாய்ச் சேர்ந்தன வல்ல. பழமையாக அவற்றுடன் உள்ளனவே. அதுபோல மாயையும, ஆணவமும், வினையும் அநாதியே உள்ளன.

குறிப்பு:—வல்லி=கொடி, சத்தி, மாயை. மலம்= ஆணவம். அன்று=அநாதியே; பொன்வாள் செய்வள்ளல் =சூரியன். சோகம்=வாட்டம், குவிதல்.

மூன்றும் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

மேற் கூறப்படுவதாவது:—இருவினைப் பயனை நுகர் தற்குரிய உயிர்கள் இறந்தபின் மீட்டும் பிறந்து, இவ்வாறே பிறப்பு இறப்புடையனவாம்.

ஏது.—தோற்றமும் ஈறும் உள்ளதற்கல்லது உளதாதல் இன்மையான்.

பொருள் :—பிறத்தலும் இறத்தலும் தொடர்ச்சியாய் உள்ள பொருட்கல்லது பிறபொருட்கில்லாமையால்.

கண்ட நனவைக் கனவுணர்வில் தான்மறந்து
விண்படர்ந் தத்துாடு வினையினால்—கண்செவிகெட்(டு)
உள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவில் தான்.

உரைநடை :—கண்செவி கெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்துாடு விண்படர்ந்து மனந்தள்ளக் கண்ட நன

வைக் கனவுணர்வில் தான் மறந்து அணுவாய்ச் சென்று கருவில் விழும்தான்.

உரை:—கண்செவி முதலியன வுடைய பருவுடம்பு அழிய முன் உள்ளதாகிய நுண்ணுடம்பு, பூதசார வுடம்பாகப் பரிணமிக்க, உயிர் அதனோடு விண், நிரய முதலிய இடங்கட்குச் சென்று, வினைப்பயன்களை நுகர்ந்து, பின்னர் நனவினைக் கனவில் மறந்தாற்போல அறிவு மறந்து, எடுத்த உடம்புகளைவிட்டு, நுண்ணுடம்போடு மாத்திரஞ் சென்று, மன முன்பற்றிய இடத்தே தள்ளக் கருவிலே போய்ப் பதியும்.

குறிப்பு:—கண்செவி=உடம்பு, உள்ளதே=படைப்புக் காலந்தொட்டு முடிவு காலம்வரை உள்ள உடம்பு, தோற்ற=செல்லும் இடத்திற்குரிய உடம்பாய்த் தோன்ற, உளம்=உயிர்; அணுவாய்=சூக்குமஉடம்புடன் மாத்திரம். முன் இறக்குங் காலத்தே மனம் எங்கே பற்றியதோ, அங்கே வந்து பிறத்தலின் 'மனந்தள்ள' என்றார்.

அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வநமப் பண்பும்—பரவிற்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டா மென்ப(து)
அடாதுள்ளம் போமா றது.

உரை:—பாம்பு தோலுரித்துப் புதிய தோல் போர்த்தலும, நனவு நீங்கிக் கனவுக்குரிய உடம்பிற் சேர்தலும், வேறுடலில் யோகிகள் புகுந்து மீளுதலும் ஆகிய உவமைகளே, (உயிர் தூலவுடம்பை விட்டுப் போதலுக்குப்) பெரிதும் வழங்குதலின், குடத்திலுள்ள ஆகாயம், வெளியாகாயத்தோடு கலப்பதுபோன்ற தொரு கூத்தாட்டம் அது என்பது பொருந்தாது. அவ்வுவமை, சூக்கும உடம்பு நீங்கிப் போகும் விதத்திற்கே உரியதாகும்

குறிப்பு :—பரவின் =மிக்கு வழங்குதலின், அடாது= பொருந்தாது. உள்ளம்=சூக்கும வுடம்பு. போமாறு= போம் ஆற்றிற்கு அது=அவ்வுவமை.

நான்காம் அதிகரணம்

இனி, நீக்கமின்றி நிற்குமாறே யுணர்த்துகின்றது.

உரை :—முதல்வன் தனது ஞானசக்தியோடு பிரிவில்லாது நிற்பன்.

குறிப்பு :—சமவாயம் என்னும் வடமொழிச் சொற்றொடர், 'நீக்கமின்றி நிற்றல்' எனப் பொருள்படும். சமவேதம், தாதான்மியம் என்பன அக்கருத்தே உடையன. ஒரு பொருளே குணகுணியாக அல்லது அவயவமுடையதும் அவயவமுமாகப் பேசப்பட்டு நிற்பது.

ஏது.—அவன் ஏகாநேக மிரண்டு மின்றிச் சருவ வியாபியாய் நிற்றலான்.

உரை :—ஒன்று, வேறு என்ற இருதன்மையுமில்லாமல் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலால்.

குறிப்பு :—ஏகம=ஒன்று. அநேகம்=வேறு.

எங்குமுளன் என்றவை யொன்றன்று இரண்டென்னில்
எங்கு முளன்அன் று) எவற்றெவனும்—அங்கண்
அவையவன் அன்றில்லைப் பொன்னொளிபோல் ஈசன்
அவையுடைமை யாளாம்தாம் அங்கு.

உரை :—எங்கும் இருக்கிறான் என்ற பிரமாணத்தாலே இறைவன் (ஓரிடத்தில் மாத்திரமுள்ள) ஒரு பொருள் அல்லன். இருபொருளாய் இறைவன் உள்ளான் என்னில், (எவற்றினுங் கலந்து) எங்கும் உள்ளான் என்பது இல்லையாகும். எவ்விடங்களினுமுள்ள எப்பொருளும் அவ்விடத்து அவைகளெல்லாம் இறைவனை யன்றித் தோன்றி நிலைபெறா. ஆதலால் முதல்வன் கதிரவனும் ஒளியும்

போலச் சிவமுஞ் சத்தியுமாய் வியாபித்திருப்பன். பொருள்களெல்லாம் அவனதுடைமை; உயிராகிய நாம் அவன்மாட்டு அடிமையாவோம்.

குறிப்பு:—என்ற அளவை, என்றளவை யெனத் தொக்கு நின்றது. அளவை = பிரமாணத்தாலறிந்த உண்மை எவற்று = எவ்விடங்களிலும. எவனும் = எப்பொருளும். ஈசன் பொன்னொளிபோல் உளன் என்பது கருத்து. பொன் = சூரியன். பொன்னு மொளியும்போற் சிவமுஞ் சத்தியுமாயுளன். அவை = பொருள்களாகிய பாசங்கள். நாம் = உயிராகிய நாம். ஆள் = அடிமை. அங்கு = அவன்மாட்டு.

மூன்றும் சூத்திரம்

உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

கருத்து:—ஆன்மப பிரகாசம உணர்த்துதல் நுதலிற்று.

உரைநடை:—உளது என்றதை ஆன்மா என்பதனோடு முடிக்க.

உரை:—நான் இதுவல்ல, அதுவல்ல என்று கூறுவதொன்று உண்டாகலானும், எனது உடல் என உடலைக் கூறுவதொன்று உண்டாகலானும், ஐம்பொறியினையும் அவற்றின் நீக்கத்தையும் அறியும் அறிவுடையதொன்று இருத்தலானும், துயின்றபோது, உணவு, செயல், இல்லாததொன்று இருத்தலானும், ஒன்றை உணரச் செய்யுங்காலை, உணர்வதொன்றிருத்தலானும், மாயையாகிய கருவி

யாகிய உடம்பினுள், உயிரென்பது உடம்பின் வேறு யுள்ளது.

கருத்து :—உயிருண்மையும் விளக்கமும் உணர்த்துதல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டு இலதென்றலின் ஆன்மா உளதென்றது.

உரை :—இதன்கண், இல்லை யென்று சொல்லுதலால், அங்ஙனம் சொல்லுவதாகிய உயிர் உண்டென்றது.

ஏது.—எவற்றினையும் அன்றென்றென விட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாதலின் அதுவே அப்பான்மாவாம் என்றது.

உரை :—உடல், பொறி, மனம் முதலிய எல்லாவற்றையும், இஃது ஆன்மாவல்ல என்று கழித்து, ஒன்றும் ஆன்மாவல்லாமையால், ஆன்மாவென்பது சூனியமென்று சொல்லிக்கொண்டு நிற்பதாகிய அறிவு இருத்தலின், அவ்வறிவே ஆன்மாவாமென்றுணர்க.

அன்றன் றெனநின் றனைத்தும்விட்(டு) அஞ்செழுத்தாய்
நின்றென் றுளததுவே நீஅனைத்தும்—நின்(று) இன்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

உரை :—உடல், பொறி முதலிய கருவிகளனைத்தையும் இது நான் அன்று எனக் கழித்தவிடத்தே நுண்ணிய ஐந்தெழுத்து வடிவாய் அறியுமறிவொன்று நிலை பெற்றுளது. அதுவே நீ யென அறிக (மலத்தாற் பிணிப்புண்ட) இந்நிலையிலே, உன்னொடு சார்ந்து நின்று எல்லாப் பொருளையும் கண்ணாடிபோலக் காட்டுவதாகிய மாயை நீயல்ல. (அறிவில்லாத மாயை நீயாகமாட்டாய்.) மாயையாலறியும அறிவிற்கு அப்பாற்பட்ட மேலான சிவமும் நீ ஆகமாட்டாய். நீ மாயைக்கும் சிவத்துக்கும் வேறாகிய தனிப்பொருள்.

குறிப்பு :—ஐந்தெழுத்தென்பது - நுண்ணிய மந்திர வடிவமேயன்றி, உயிராகாது. மாயை, பொருளை விளக்குவ தன்றித் தான் ஒன்றையும் அறியாது. இறைவன் மாயையாற் பொருள்களை அறிவானல்லன். ஆதலால், மாயையும் சிவமும் உயிராகமாட்டா வென்றவாறு.

இரண்டாம் அதிகரணம்

இனி, எனதுடல் என்றலின் ஆன்மா உளது என்றது.

உரை :—உடம்பைத் தானாகக் கூறாது, என்னுடையது என்று அதனை உடைமைப் பொருளாகக் கூறும் வழக்க மிருத்தலின், அங்ஙனம் கூறும் உயிர் ஒன்று உளது என்றவாறு.

ஏது—என் பதி, என் மனை என்றற்போல, என் கை, என் கால் என நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை:—எனது ஊர், எனது வீடு என்று சொல்வது போல, உடம்பின் பகுதிகளாகிய கை, கால் முதலியவற் றையும் என்னுடையனவெனக் கருதி நிற்பதாகிய ஒன் றிருத்தலின், அதுவே அவ்வுயிர் என்றது.

குறிப்பு:—தலை மாத்திரமாய் நிற்கும் இராகுவை, இராகுவினது தலை யென்றபோது ஒற்றுமைப் பொருள் கொள்ளுவதுபோல, எனதுயிரென்ற இடத்துங்கொள்க. உடம்பு முதலியவற்றோடு கூடிநின்ற காலை, உடம்பையும் உயிரையும் பகுத்துத் தன்னுடையன வென்று கூறுதல் உடம்பெடுத்த உயிர்க்கியல்பே. உடம்பெடாவிடின், உயிர் தன்னை அவ்வாறு கூற முடியாது.

என(து)என்ற மாட்டின் எனதலா தென்ன(து)
உனதலா துன்கைகால் யாக்கை—என(து) என்றும்
என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னில் அவைவேறம் உணர்.

உரை:—எனது என்று சொல்லுகின்ற இயற்கைபற்றி உன்னுடைய உடம்பின் பகுதிபோலல்லாத பதி, மனை முதலியவற்றை என் பகுதியல்லவென்று கூறுது (உயிரென மயங்கினுய்) அதுபோல, கை, கால், உடம்பு, பாச அறிவு முதலியவற்றை என்னுடையனவென்று கூறிக்கொண்டு நீ நிற்கின்றுய். ஆய்ந்து பார்க்கின், அவையும் உனக்கு வேறுனவை யென்றுணர்க.

மூன்றும் அதிகரணம்

இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளதென்றது.

உரை:—(ஒவ்வொரு பொறிபோல ஒவ்வொன்றை யுணராது, பொறி வாயிலாக) ஐம்புலன்களையும் அறிவ தொன்றிருத்தலின், அதுவே உயிர் என்பது.

எது—ஐம்புலனுகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரி யங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின், இவ்வைந்தினுலும் ஐம் பயனும் அறிவதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—ஐம்பொறிகளாலறியப்படுவனவாகிய ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமென்ற ஐம்பூத நுட்பங்களுள், ஒருபொறி யறிந்ததைப் பிறிதொருபொறி அறியமாட் டாமையின், ஐம்பொறியையுங் கருவியாகக்கொண்டு ஐந்து பயனையும் அறியவல்லது ஒன்றிருத்தலின், அதுவே மேற் கூறிய உயிர் என்பதாம.

குறிப்பு:—காது கேட்பதைக் கண் கேளாது. கண் பார்ப்பதைக் காது பாராது. உயிரானது காதாற் கேட்டும் கண்ணுற்கண்டும் பயன் பெறுகின்றது என்பது கருத்து.

ஒன்றறிந்தது தொன்றறியா தாகி யுடல்மன்னி
அன்றும் புலனுயவ் வஞ்சேழுந்தை—யொன்றறிதல்
உள்ளதே யாகில் அதுநீ தனித்தனி கண்(டு)
உள்ளல்அவை ஒன்றல்லை யோர்.

உரை :—உடலிலே நிலைபெற்று, தம்முள் ஒன்று அறிவதை மற்றொன்றறியாத நிலையை யுடையனவாய்த் தம்முள் மாறுபட்ட, ஒலி முதலிய ஐம்புலன்களை ஐந்தெழுத்தாற் செலுத்தப்பட்டு ஆராய்ந்தறிகின்ற ஐம்பொறிகளை, இப்பொறி காணும்; இப்பொறி கேட்குமென அறிவதொன்று இருப்பதானால் அது நீயென அறிக. (ஐம்பொறிகளாகிய) அவைகள் தனித்தனி தமக்குரியவற்றை யறிவதன்றி அறிகின்றேனென் றுணரமாட்டா. ஆகலின், நீ அவற்றினே டொன்றாகமாட்டாய், (நீ அவற்றின் வேறே) என்றாராய்ந் தறிக.

குறிப்பு :—பொறிகள் தம்மை யறியமாட்டா. உயிர் பொறிகளை யறியும். அன்றம்=மாறுபடும். அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறிகள், அஞ்செழுத் தெனப் பட்டன.

நான்காம் அதிகரணம்

இனி, ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளதென்றது.

உரை:—ஐம்புலனும் ஒடுங்கிய விடத்துள்ள கனவில் நிகழ்ந்தவற்றை அறிவதொன் றிருத்தலின், அஃதாகிய ஆன்மா உண்டென்பது.

குறிப்பு:—ஒடுங்கிய இடத்து நிகழ்ந்ததற்கு 'ஒடுக்கம்' என்பது ஆகுபெயர்.

எது—நனவின்கட் கனவு கண்டாமென்றும் கனவு கண்டில மென்றும் நிற்ப துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை:—விழித்திருக்கும்போது, தூங்கும்போது கனவு கண்டாற் கண்டேனென்றும், காணவிடத்து அதனைக் காணவில்லை யென்றும் அறிந்து நிற்பது ஒன்றிருத்தலின், அதுவே அவ்வுயிரா மென்றது.

குறிப்பு:—கனவில் அறிவது நுண்ணுடம்பாயினும், கனவொழிந்த காலை, நனவையுங் கனவையும் அறிவது உயிரென ஓர்க என்றவாறு.

அவ்வுடலின் நின்(று) உயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்
செவ்வியின் அவ்வுடலிற் சென்றடங்கி—அவ்வுடலின்
வேறென்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுடல் நீஅல்லை மற்று.

உரை:—பருவுடம்பிலே நின்று இயங்குதலையுடைய அந்த ஐம்பொறிகள் ஒடுங்கிக்கிடப்ப, அவ்வுடலின் அடங்கி வருத்தமில்லாது செவ்வையாக வேறுபோய், அந்தூலவுடம்பினைப் போன்ற மற்றோருடம்பெடுத்து, வேறு வகையாகக் கண்டுங் கேட்டும் உண்டும் உற்றும் உயிர்த்தும் விளையாடி, கனவு முடிந்தவுடன், மீளப் பருவுடம்பினை மாறி மேற்செல்லுதலால், கனவிற்குரிய சூக்குமவுடம்பு நீ ஆகமாட்டாய்.

குறிப்பு:—அவ்வுடல் = பருவுடம்பு. உயிர்ப்பு = இயக்கம். அ, ஐம்பொறி = தூலவுடம்பிற்குரிய பொறிகள். செவ்வியின் = வருத்தமின்றி. 'சென்றடங்கி' யென்பதை 'அடங்கிச் சென்று' என மாறுக. மாறல் = மாறலால், மாறி மேற்செல்லுதலால். உடல் = சூக்கும உடம்பு.

ஐந்தாம் அதிகரணம்

இனிக் கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா உளதென்றது.

உரை:—மேல், துயின்றால், பிராணவாயு சரித்தும், உணவு, தொழில் முதலியன இல்லாதிருத்தலின், (பிராணனுக்கு வேறாக) உயிர் உண்டென்பது.

ஏது—ஒடுங்கின இடத்து, இன்பதுன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின், ஒடுங்காத விடத்து இன்ப துன்பஞ் சீவியா நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை:—துயிலுமிடத்தே, புலன்களாலேற்படும் இன்ப துன்பமும் அனுபவமும் இயக்கமும் உடம்பின்கண்ணே இல்லாமையாலும், துயிலாத காலத்தே, அவை நிகழ்தலாலே, அந்நிகழ்ச்சிக் கேதுவாய தெதுவோ அதுவே அவ்வுயிரென்றது.

குறிப்பு.—உண்டி = பொறிவாயிலாக, இன்ப துன்ப அனுபவம் சீவியா நிற்பது=இயங்குவது. பிரகிருதி=உடம்பு. பிரகிருதிக்கு=பிரகிருதியின்கண், உருபு மயக்கம். பிரகிருதி யென்பது இயற்கை யெனப் பொருள்படும். அது பிராணவாயுவைக் குறிக்குமென்பாரு முளர். துயிலிலும் விழிப்பிலும் ஒரு தன்மைத்தாயது, பிரகிருதியாகிய உடம்பு என அறிக.

கண்டறியும் இவ்வுடலே காட்டொடுங்கக் காணாதே
உண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியும்
உள்ளம்வே றுண்டா யொடுங்காது) உடலதனில்
உள்ளதாம் உண்டிவினை யூன்.

உரை:—பொருள்களைப் பார்த்தறிதற்கு நிலைக்களமாகிய இவ்வுடலின்கண்ணே, பொருள்களைக் காட்டுவனவாகிய கருவிகள் தொழிற்படாது ஒடுங்கியபோது, உடம்பிலே, நுகர்ச்சியுஞ் செயலும் இல்லாதிருக்கவும், பிராணவாயு இயங்குதலால், (கருவிகளாற்) பார்த்தறியும் உயிர் பிராணவாயுவுக்கு வேறாக உண்டு (அவ்வுயிர்) ஒடுங்காமல் உடலிற் பொருந்தியிருப்பின், ஊனுலாய உடம்பு, நுகர்ச்சியும் இயக்கமும் உடையதாம். இதனை ஆய்ந்தறிக.

குறிப்பு:—காட்டு=கருவி, 'காணாதே ஒடுங்க' என மாறுக. காணாதே=தொழிற்படாமல். உள்ளம்=உயிர், 'உண்டாய்' என்பதிலுள்ள 'ஆய்' என்பதை இறுதியிற் கொள்க. ஊன்=உடம்பு 'ஊன் உண்டிவினை உள்ளதாம்' என மாறுக.

ஆறும் அதிகரணம்

இனி, உணர்ந்த உணர்தலின் ஆன்மா உளது என்றது.

உரை:—(கடவுள் கருவிகள் வாயிலாகப் பொருள்களை) அறிவிக்க அறிதலின், (கடவுளுக்கு வேறாக) உயிர் உண்டென்றது.

ஏது :—அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—முதல்வன் மறந்து மறந்து அறிதலில்லாமல் அறிந்த முறையே அறியுமியல்பினன் என்று அருள் நூல்கள் அறிவிக்க, அறிந்து ஆசாரியன் அறிவுறுத்தும் உபதேச மொழியைப் பெற்றுடையதாய் நிற்பது ஒன்று இருத்தலின், அதுவே அவ்வுயிர் என்றது.

குறிப்பு :—உபதேசி = உபதேச முடையவன்.

அறிந்தும் அறிவதே யாயும் அறியா(து)
அறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த(து)
எதுஅறிவும் அன்றதும் மெய்கண்டான் ஒன்றின்
அதுஅதுதான் என்னும் அகம்.

உரை :—(பொருள்களை ஐம்பொறிகளாலும் ஒருங்கே அறியாது) ஒன்றையே ஒரு காலத்து அறிந்தும், அறியப் படுவதாயும், முன் அறிந்ததனை மறந்து அறியாதும், அறிந்ததை இடைவிடாமல் அறியுமாற்றலின்றி, விட்டு விட்டு ஐந்து அவத்தைப்பட்டு அடங்கி, மீள அறிந்தும் வருவதெது? அது பேரறிவுமாகாது. உண்மையுணர்ந்தான் மனவொருமைப்பட்டு ஆராயின், எப்பொருளை அறிகின்றதோ அதன் வயப்பட்டு நின்று அதனைத் தானெனக் கருதுந்தன்மையுடையது உயிரென விளங்கும்.

குறிப்பு :—அங்கு = உணர்த்துந் தானமாகிய புருவ நடுவில். அகம் = உயிர். மெய்கண்டான் என்ற தனது

பெயரைக் குறிப்பாக அமைத்தனர் போலும்! ஒவ்வொன்றாயறிதல், புதிதாக அறிதல், அறிந்ததை அறியாது விடுதல், இடைப்பட்டறிதல், அவத்தைப்பட்டறிதல் என்பன. சார்ந்ததன் வண்ணமாதல், உயிரினியல்பு இவைகளில்லாத முதல்வன் உயிரின் வேறு என்றவாறு.

ஏழாம் அதிகரணம்

இனி, மாயா யந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது.

உரை :—மாயா காரியங்களாலாய சூத்திரப்பாவை போன்ற உடம்பினுள் உயிர் உள்ளது.

குறிப்பு :—மாயா காரியங்களின் சமூகமாகிய உடம்பு உயிராகாது. அச்சமூகத்திற்கு வேறாக உயிர் உண்டு என்றவாறு.

ஏது:—அவை தாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான்.

உரை :—மாயா காரியங்களாய அவைகள் தத்தமக்குரிய வேறு வேறு பெயருடைமையால், (அவை உயிரல்ல).

கலையாதி மண்ணந்தங் காணில் அவைமாயை
நிலையாவாம் தீபமே போல—அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில்அது தனுவாம்
தான்அத்தின் வேறாதம் தான்.

உரை :—ஆராயுமிடத்து, கலை முதல் நிலம் ஈறாகவுள்ள தத்துவங்களெல்லாம், மாயையினாலாயவையாகலின், நிலையாதனவாகும். அவை தொக்கபோது விளங்கும் ஞானத்தினியல்பை அசையாமல் கருத்தொடுங்கி முதலில் அதன் றன்மையறிந்து பின் அவற்றின் பயனை ஆராயின், கண்ணுக்கு விளக்குப்போல அவைகள் உயிர்க்குப் பொருள்களை விளக்கும் தூல சாரண பரமாகிய உடம்பாகும். உயிர்தான் அவ்வுடம்பின் வேறாவதே.

இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்றுஅவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்றுஅஞ்சு அவத்தைத்தே.

கருத்து :—இதுவுமது.

உரை :—ஆன்மா, அகக்கருவிகளாய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அவைகளில் ஒன்று அல்ல; அரசனுக்கு அமைச்சன்போல அவற்றைத் துணையாகக் கொண்டுளது ஆன்மா தன்னோடு எப்போதும உள்ள ஆணவ மலத்தினாற் பொருள்களைத் தானே அறியமாட்டா. அவற்றின் துணைகொண்டு அறிந்து ஐந்துவகையான உணர் வெல்லைகளை யுடையது ஆன்மா.

குறிப்பு :—சகசமலத் துணரா, ஆன்மா அந்தக்கரண மவற்றில் ஒன்று அன்று. அமைச்சு அரசு ஏய்ப்ப அவை சந்தித்தது. (அவற்றோடு) நின்று ஐந்து அவத்தைதது என உரைநடை கொள்க. அவத்தை=உணர்வின் எல்லை. ஏய்ப்ப=போல.

முதல் அதிகரணம்

ஈண்டு இவ்வான்மா அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்று அன்று என்றது.

உரை :—வெளிப்படை.

குறிப்பு :—கலை, அராகம், வித்தை முதலிய தத்து வங்களை ஒப்புக்கொள்ளுவார், ஆன்மா இல்லையென்பதில்லை. யாகலின், மனம், புத்தி முதலிய அந்தக்கரணங்களையே ஆசிரியர் விதந்தனர்.

ஏது:—அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உரை:—அந்தக்கரணங்கள் அவற்றிற்குக் கீழுள்ள பொறிகளை நோக்க மிகுதியாக அறியுந்தன்மையுடையன வெனினும், உயிர்க்கு அறிதற் கருவிகளாய்ச் சடமாயிருத்தலின்.

குறிப்பு:—பிரகாசம் = அறிவுள்ளது. அப்பிரகாசம் = சடம், அறிவில்லாதது.

மனமாதி யால்உணர்தல் மன்னு புலன்கள்
மனமாதி மன்புலனின் அல்லன்—மனமேல்
உதித்தோன்றை உள்ளம் உணர்தல் அதனின்
உதிக்கும் கடற்றிரையை ஒத்து.

உரை:—மனமுதலியவற்றால் உணரப்படுபவை, பொறிகள் முதற்கண் உணரும் புறத்தே நிலைத்த பொருள்கள். உள்ளத்தால் உணரப்படுவது - மனத்துக்கு மேலுள்ள புத்தி தத்துவத்திற்றோன்றிய தொன்றே. அது கடலலை போலவந்து தோன்றும். மனமுதலியவை, புலனுக்கு வேறாயினாற்போல, ஆன்மாவும், மனமுதலியவற்றிற்கு வேறாவன்.

குறிப்பு:—மனமாதியால் உணர்தல் மன்னு புலன்கள், உள்ளம் உணர்தல் மனமேல் உதித்தொன்றை, கடல் திரையை ஒத்து உதிக்கும். அதனின், மனமாதி மன்புலனின் (ஆன்மா) அல்லன் என உரைநடை கொள்க. உணர்தல் = உணரப்படுபவை. அதனின் = அதனால். புலனின் = புலன்போல. அல்லன் = வேறாவன். கடல் அலைபோலத் தோன்றுதலாவது, பொறியுணர்வு முதலிலே தோன்றி, அதன் பின்னர் மனவுணர்வு தோன்றி, அது போய்ப் புத்தியை அடைய, அங்கே இன்பதுன்ப மயக்க வுணர்ச்சி தோன்றுதல்.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ளம் இவ்வேறும்
அவ்வேறும் போதுபோல் ஆங்கு.

உரை நடை:—உள்ளம் ஆங்குச் சித்தமாய்ச் சிந்தித்து மனமாகிப் பந்தித்து ஆங்காரமாய்த் தெளியாது புந்தியாய் ஆய்ந்து துணிந்து வெவ்வேறு தானே இவ்வேறும். அது போது அவ்வேறும் போல்.

உரை:—(புருடதத்துவமாய்) நின்ற உயிர், மனவுணர் வாற் பொருள்களைக் காணுமிடத்துச் சித்தத்தைச் சேர்ந்து நின்று இஃது யாது என நினைந்தும், மனத்தைச் சேர்ந்து நின்று பற்றியும், பின்னர் ஆங்காரத்தைச் சார்ந்து நின்று இஃது இன்னதென அறிவேனென்றெழுந்தும், தெளிவு பிறவாது புத்தியினுலே இன்னதென்று நிர்மாணித்தும் வெவ்வேறு வகையில் அறிதலால், இந்த நால்வகை அந்தக் கரணங்களுக்கும் வேறுவன் புருடன். (அஃது எதுபோலு மெனின்) கதிரவன் முதலியவற்றோடு கூடி, நாள், நாழிகை முதலிய பாகுபாடு செய்தற்கேதுவாய காலதத்துவம், கதிரவன் முதலிய பொருள்களின் வேறுதல் போல என்க.

குறிப்பு:—போது = காலம். 'சிந்தித்தாய்' என்பதன் இறுதியிலுள்ள ஆய் என்பதைச் 'சித்தம்' என்பதனோடு கூட்டுக. ஐம்பொறிகளுக்குப்போலவே, அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு தொழில்கள் உள்ளன. அந்தக்கரணங்களோடு கூடிநின்று அத்தொழில்களைத் துஞ் செய்வது உயிர். ஒரோவொன்றே செய்வது அந்தக் கரணம் என அறிக.

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகார(ம்) மனம்சித்தம் விந்துப்— பகாதிவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று.

உரை நடை:—அகாரம் அகங்காரமாகிய அந்தக்கரணத்தைச் செலுத்தும். உகாரம் புத்தியைச் செலுத்தும். மகாரம் மனத்தைச் செலுத்தும். விந்து சித்தத்தைச் செலுத்தும். நாதம் புருடனாகிய உயிரைச் செலுத்தும். இவ்வெழுத்துக்களைப் பிரிபபின்றிப் பார்த்த காலை, அவை பிரணவமாகிய ஓங்காரமாம். இவற்றால், கடலில் அலையெழுந்து வீழ்ந்து மீண்டெழுதல் போல, அறிவு நிகழும். (நினைப்பு மறப்பு மாறிமாறி வரும் என்பது கருத்து.)

குறிப்பு:—'அகார உகாரம அகங்காரம், புத்தி' யென்றது நிரல் நிறை. உளம்=புருட தத்துவமாய் நின்ற உயிர் 'போன்று' என்பது, மூன்றும் அடியில் 'ஆம்' என்பதனோடு முடிவது.

> எண்ணில(வு) ஓங்காரத்(து) ஈசர் சதாசிவமாம்
> நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
> பகர் அயன்மா லோடு பரமன் அதி தெய்வம்
> அகர உக ர(ம்) மகரத் தாம்.

உரை:—எண்ணத்திலே நிலவும் ஓங்காரத்திலே, பொருந்திய விந்துவுக்கும் நாதத்துக்கும் அதிதெய்வத்தை ஆராயின், மகேசுரனும் சதாசிவனுமாவர். அகரம, உகரம், மகரத்திற்கு அதிதெய்வங்கள். முறையே, (சுத்தவித்தையினுள்ள) பிரமன், மால், உருத்திரன் என்பவர்களாவர்.

குறிப்பு:—இயக்குகிற கடவுளர், சுத்ததத்துவங்களினுள்ளவர்கள் ஆதலின், இங்கே கூறப்பட்ட அயன், மால், பரமன் சுத்தவித்தையிலுள்ளாரென்பது குறிக்கப்பட்டது.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வின்று என்றது.

உரை:—மேலே, இச்சூத்திரத்தே பேசப்படும் உயிரானது தன்னோடு எப்போதுங் கூடியுள்ள ஆணவமலத்

தினுல், (கருவிகளின் துணையின்றிப் பொருள்களை அறியும்) அறிவில்லாததாகும்.

குறிப்பு:—சகசம்=இயல்பு போல உடனுய் உள்ளது. மாயை, கன்மங்கள், இடையில் உளவாகிய மலங்கள்.

ஏது.—அது தான் ஞானதிரோதகமாய் மறைந்துக்கோடு நிற்றலால்.

உரை:—அந்த ஆணவ மலமானது, அறிவுக்கொரு மறைவாய், அறிவு இல்லையென்னும்படி மறைத்துக் கொண்டு நிற்பதாகலின்.

குறிப்பு:—திரோதகம்=மறைவு.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல்
ஆயாதாம் ஒன்றை அதுஅதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுள் மறைத்(து) ஒன்றுங் காட்டம்போல்
தன்னைமலம் அன்றணைதல் தான்.

உரை:—உயிரானது மாயையினுலாகிய உடம்பாகிய விளக்கினைக்கொண்டு பாராதாயின், ஒரு பொருளையும் அறியாது. மாயையின் வேருகிய ஆணவமலம் உயிர் தன்னை அநாதியே சார்ந்திருத்தல், அதன் வண்ணமாய்ச் சார்ந்திருந்து தனக்குக் கேடில்லாத நெருப்பினைத் தனக்குள் மறைத்து ஒன்ருய் நிற்கும் விறகுபோலா மென்ப.

குறிப்பு:—விளக்கா=விளக்கு ஆக. உள்ளம்=உயிர். அதுவதுவாய் என்பதை, ஆயாதா மென்பதனேடும் வீயாத என்பதனேடுங் கூட்டலாம். அதுவதுவாதல்= தான் வேறெனத் தெரியாது நிற்றல். வன்னி=நெருப்பு. காட்டம்=விறகு. ஒன்ருய்=அத்துவிதமாய்.

மூன்ரும் அதிகரணம்

இனி, இவ்வான்மா, சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுய் நிற்கும் என்றது.

உரை:—மேலே, உயிரானது, நனவு, கனவு, துயில், பேருறக்கம், உயிர்ப் படக்கம் என்ற ஐந்து உணர்வெல்லைகளையுடையனாயிருப்பது என்றவாறு.

எது:—அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

உரை:—அவ்வுயிர்தான் ஆணவ மலவடிவின் மறைந்து நின்ற நிலையிலே, தத்துவங்களோடு கூடிய காலை, அருவமாகிய தத்துவ வடிவினனாய் நிற்பதாதலின்

குறிப்பு:—இப்படித் தத்துவ வடிவாய் நிற்றல், ஆணவ மல நீக்கம்வரை யாதலின், 'மல சொரூபத்தின் மறைந்து' என்றார். (மலம் நீங்கியபின், சிவத்தின் மறைந்து நிற்குமென்பது கருத்து).

ஒன்றணையா மூலத்(து) உயிரணையு(ம்) நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்து—மன்றவே
ஐயைந்தாம் நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

உரை நடை:—நல்நுதலில், வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்து ஆம்: கண்டத்தில், வாக்காதி மெய்யாதி விட்டகன்று வேறு (ஆய) ஐயைந்தாம். இதயத்திற் சித்தம் சென்று அணையும். நாபியினில் உயிர் அணையும். அணையாமூலத்து ஒன்று.

உரை:—(நனவிடமாகிய) நெற்றியில் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற அறிவுப் பொறியைந்தும் சொல்லுதல், செல்லுதல், இடுதல், கழித்தல், மகிழ்தல் லென்ற வினைப்பொறி யைந்தும் ஆகிய பத்தையும் தெளிவாகப் பொருந்திய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். (கனவிடமாகிய) கழுத்தினில், அப்பத்தினையும் நீங்கி வேறாகிய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். (துயிலிடமாகிய) இதயத்திலே சித்தம் தொழிற்படும். (துரியத்

தானமாகிய) உந்தியிலே பிராணவாயு மாத்திரந் தொழிற்படும். கருவிகள் அணையாத மூலாதாரத்தில் புருடன் ஒன்றே நிலைபெறும்.

குறிப்பு:—துரியில், சித்தத்தோடு பிராணனும் புருடனும் தொழிற்படும்; துரியாதீதத்தில், பிராணனும் புருடனும் மாத்திரம் உள்ளன என அறிக. இருபத்தைந்தென்றது, பொறிகள் பத்தும் உரிய விடயங்கள் பத்தும், வாயுக்கள் பத்தும், அகக் கரணங்கள் நான்கும், புருடன் ஒன்றுமாம்.

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்—இலாடத்தே
அவ்வவ இந்திரியத்து அந்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கலது ஆங்கு.

உரை:—நெற்றியிலே நனவுநிலையுற்ற உயிரானது நனவிலேயே ஐந்து அவத்தைகளையும் அடையும். அவையாவன: ஐம்பொறிகளுள் ஒவ்வொரு பொறியாலுணரக்கூடிய விடயங்களை அறிந்து அவ்வப்போதே அவ்வவற்றின் நீங்குதல், இதுபோலச் சுத்தாவத்தைகளும் ஐவகைப்படும்.

குறிப்பு:—நனவில் நனவு நனவிற் கனவு முதலிய ஐந்து நுட்ப வுணர்வெல்லைகளைக் குறித்தார். துறைகள் = விடயங்கள். அதுவே = அப்போதே. அது = சுத்தாவத்தை. ஆங்கு = அவ்வாறு (ஐவகைப்படும்).

ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்(கு)
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

கருத்து:—இவ்வான்மாக்களிடத்துத் தமது முதல் உபகாரமுணர்த்துதல் நுதலிற்று.

உரை :—மேலே கூறிய உயிராலே, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தாலும் (தம்மையுந் தம்மைச் செலுத்தும் உயிரையும்) அறியமாட்டா. அப்பொறிகள்போல, உயிர்களும் தம்மையும் தமது அறிவிற்கு விளக்கந் தருபவனாகிய தனி முதல்வனது திருவருட் சத்தியையும் அறியமாட்டா. உயிர்கள் முதல்வனால் அறிதல், காந்தத்தின்முன் வைத்த இரும்புபோல முதல்வன் சந்நிதிமாத்திரையில் நிகழும். (ஆதலால் முதல்வன் விகாரப்படான்).

குறிப்பு :—தாம் = தம்மை. உணர்வின் தமி = அறிவுக்கு (விளக்கமாய) தனிமுதல். 'அருள்' என்பது அறியா என்பதோடு முடிகின்றது. அருள் = மறைப்புச் சத்தி.

கருத்து :—சுட்டு நிலையில் இறைவன் உயிர்க்குச் செய்யும் உதவியை உணர்த்துதல் கருதியது.

முதலதிகரணம்

௬ண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணரும் என்றது.

உரை :—இதனுள் ஐம்பொறிகள் உயிராற் பொருள்களை யறியும்.

ஏது :—அவற்றினுன் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா வாகலான்.

உரை :—அவற்றினோடு உயிர் ஒற்றுமைப்பட்டு அறிந்தாலன்றி, அவை ஒருபொருளையும் உணரமாட்டா வாகலின்.

ஐம்பொறியை ஆண்டங்(கு) அரசாய் உளம்நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்—ஐம்பொறியிற்
காணுதேற் காணுது காணும்உளம் காணுதேல்
காணுகண் கேளா செவி.

உரை :—அரசன் செங்கோல்மண்டபத்தி லிருந்து ஏவலாளரைக் காரியங்களிற் செலுத்தி ஆளுதல்போல, உயி

ரானது ஐம்பொறிகளைச் செலுத்தி ஆண்டு நெற்றியிலே நிற்பதாகலின், ஐம்பொறிகள் உயிரை அறியமாட்டா; ஐம்பொறி வாயிலாகப் பொருள்களை அறிந்தாலன்றித் தானாக உயிர் பொருள்களை யறியாது: உயிர் ஒற்றுமைப் பட்டாலல்லாமல், கண் பாராது; காது கேளாது. (ஆதலால் ஐம்பொறிகளும் உயிரும் தம்முள் இன்றியமையா.)

குறிப்பு:—கனவில், பொறிகளின் உதவியை உயிர் வேண்டுவதில்லை.

இரண்டாம் அதிகரணம்

இனி, இதுவுந் தமது முதலாலே உணரும் என்றது.

உரை:—மேல், உயிரும், தமது தலைவனாகிய கடவுளினாலே பொருள்களை அறியும்.

ஏது:—இவ்வான்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானுந் தன்னையுணராது நிற்றலான்.

உரை:—தன்னாலே பொருள்களை அறியும் இந்திரியங்கள், தம்மையும் தன்னையும் அறியாமைபோல, உயிரும் தன்னையும் தனது முதல்வனையும் அறியாமல் நிற்றலால்.

குறிப்பு:—தன்னை = தன்னை, என்றும், தன் + ஐ = தனது தலைவன் என்றும் இருபொருள்படும்.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகம் சேட்டித்த(து)
என்னு மறையின் இயல்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணாக உளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணான் சிவனசத்தை இன்று.

உரை:—மாறா நிலைப்பொருளாகிய சிவபெருமான் திருமுன்பே உலகம் தொழிற்படுகின்றதென்ற மறைப் பொருளை மறந்தவனே! மறைகள் இயம்பிய முதல்வன் தனக்குக் கண்போலப் பொருள்களை விளக்கி நிற்ப, உயிரானது தனது வினைக்கீடாகப் பொருள்களை அறிந் தனுபவிக்கும். அப்படி இறைவன்கண்ணாக நின்ற

பொழுதும், சுட்டுப் பொருளாகிய அசத்துப்பொருள்களை உயிர்போல அனுபவியான்

குறிப்பு :—மன்னுசிவன் = பேரின்ப நிலையருளும் இறைவன் உலகம் = உயிர்கள் சொன்னசிவன் = முற்றுணர்வுடைய முதல்வன் சிவன் = தூய தன்மையன். எண்ணான் = சருதி நாசமாட்டான் பொறிகள் உயிரின பொருட்டறியும: உயிர், தன் பொருட்டே யறியும் இறைவன் பொருட்டன்று என்பது கருத்து சத்தி = சத்தி சஙகற்பம

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை யாதல் மீன் போல—மெய்யையறிந்
கண்டகேட் டுண்டுயிர்த்து நற்றவாறும் ஐம்புலனக்
கண்டனுய் மனத்துநிலை காண்

உரை :—கதிரவனுடைய ஒளியிலே அடங்கித் தோன்றாது நிற்பனவாய், அவனுடைய ஒளியை இன்றியமையாத நட்சத்திரங்கள்போல மெய்ப்பொருளாகிய இறைவனுதவியால், உயிர் கண்டுங் கேட்டும உண்டும் மோர்ந்தும் தொட்டு முணரப்படும ஐம்பொறிக்கு விடயமாய பொருள்களைத் தெரிந்து (வேறுதலுமா ஒன்றுதலுமின்றி) இறைவனோடு உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக

அருளுண்டாம் ஈசற்கு அதுசத்தி யன்றே
அருளும் அவனை யன்றி யில்லை—அருளின்று
அவனன்றே யில்லை அருட்கண்ணார் கண்ணுக்கு (ந)
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து.

உரை:—ஈசன்பால் உயிர்களை உய்விக்கும் இரக்கம் உண்டு. அஃது அவனது சத்தியாகும் அச்சத்தி அவனை யின்றியமையாது அவனும் அச்சத்தியை யின்றியமையான். சத்தியுஞ் சிவமும, குணமுங் குணியும்போல, ஞானக்கண்ணுடையார் அறிவுக்குக் கதிரவனும ஒளியும் போலப் பொருந்தி நிற்குமென அறிக.

ஆறும் சூத்திரம்

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

கருத்து:—சத்தும் அசத்தும் வரைசெய்துணர்த்துதல் நுதலிற்று.

உரை:—இறைவன் அறியப்படு மியல்பின னெனின (உலகப் பொருள் போல) நிலையிலாப் பொருளாவான். அவன் எவ்வாற்றானும் அறியப்படாதவனெனின், அவன் சூனியமாவன். ஆகலின் இரண்டு தன்மையுமின்றி உயிரறிவாலறியப்படாமையும், பதியறிவால் அறியப்படுதலுமாகிய இரண்டு வகையானும் இறைவன் சித்தாகிய சத்தாய் உள்ளவனெனக் கூறுவர் மெய்யில் நிலைபெற்று உயர்ந்தோர்.

குறிப்பு:—உரு = இயல்பு. அசத்து = நிலையிலாப் பொருள். உணராது = உணராதது, உணரப்படாதது. சிவசத்து = சித்தாகிய சத்து.

கருத்து:—நிலைப்பொருள் இது, நிலையாத பொருளிது என அறிவித்தல் கருதியது.

முதல் அதிகரணம்

கண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.

உரை:—இவ்வுலகில், கருக்க அறிவினால் அறியப்பட்ட சுட்டுப்பொருள் நிலையாத் தன்மையுடையது.

ஏது.—**அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.**

உரை:—அவைதாம உள்ளதென்றறியு மறிவைப் பயப்பிப்பதாய் இருந்தே மறைந்து இல்லையென்ற அறிவைப் பயப்பிப்பதாய் நிற்பனவாகலான்.

குறிப்பு:—பிரகாசம் = உபலத்தி, உள்ளதென்ற அறிவு. அப்பிரகாசம் = அநுபலத்தி, இல்லையென்ற அறிவு.

அசத்தறியாய் கேள்நீ அறிவறிந்த வெல்லாம்
அசத்தாத(ம்) மெய்கண்டான் ஆயின்—அசத்தலாய்
நீர் லெழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேநும்
ஓரின்அவை இன்றமா(று) ஒப்பு.

உரை:—அசத்தின் தன்மையறியாதவனே! நீ கேட்பாயாக. சத்தினியல்பு உணர்ந்தவன் ஆராயுமிடத்து (மாயா கருவியின் உதவியால்) அறியப்பட்டனவெல்லாம் நிலையாதனவாகும். நிலையாப் பொருளல்லாதவனே, நிலையாமைக்கு உவமைகளாவன இவையென்று இப்போது ஆராயுங்கால், நீர்மேல் எழுதிய எழுத்தும், நிகழும்போதே மறைகின்ற கனவும், கானலும் என்னுமிவை என்றவாறு.

குறிப்பு:—'மெய்கண்டான்' என்ற குறிப்பு ஆசிரியர் திருப்பெயரை உணர்த்துமாறறிக. அசத்தலாய் = அசத்து + அலாய் = அசத்து அல்லாதவனே. அசற்காரியவாதி யல்லாத அறிவுடையவனே என்று முனிவர் பொருளுரைத்தார். நீரிலெழுத்து முதலியன நிலையாமைக்கு உதாரணங்களாமன்றி, இல்பொருளுக்கு உவமையாகா வென அறிக.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனாதீத கோசாமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்று உணர்தற் பாற்று.

உரை:—மேலே கூறுவதாவது, முற்கூறிய பிரகாசம், அப்பிரகாசமென்ற இரண்டு இயல்புமின்றி, சொல்லையும் மனத்தையுங் கடந்ததாய், அஃதாவது பாசஞானத்தையும் பசுஞானத்தையுங் கடந்ததாய் (பதிஞானத்தால்) நேரேயறிந்தனுபவிக்கற்பாலதாய் நிற்கும் அப் பரம்பொருள்

நிலைப்பொருளாயுள்ள சிவமென்று (பெரியோரால்) அறியப்படுந் தன்மைத்து என்றவாறு.

ஏது.—பிரகாசத்திற்குப் பிரகாசிக்கவேண்டுவது இன்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசம் இன்மையானும்.

உரை:—(மனம் வாக்குகளால்) அறியப்படும் பொருள், இறைஞானத்தால் அறியப்பட வேண்டுவதில்லை யாகலானும், ஒருவாற்றானும் அறியப்படாத தொன்றிற்கு எக்காலத்தும் விளக்கம் இல்லாமையானும்.

குறிப்பு:—இறைவன், கருவிகளா லறியப்படும் பொருளில்லை ஒருவாற்றானும் அறியப்படாத பொருளு மில்லையென்பது கருத்து.

எண்ணிய சத்தன்று அசத்தன்றும் என்றலின்
கண்ணி உளதென்றல் மெய்கண்டான்—எண்ணி
அறிய இரண்டாம் அசத்தாதல் சத்தாம்
அறிவறியா மெய்சிவன்றாள் ஆம்.

உரை:—பரம்பொருள், கருதப்பட்ட சத்துப் பொருளும் அசத்துப் பொருளும் அன்று என்னில், சத்தும் அசத்து மாகாதபொருள், யாது காரணம்பற்றி உண்டென்றறிவது. (கூறுக). சத்தி னியல்புணர்ந்தோன் ஆராய்ந்தறிய, கருவிகளின் உதவியால் அறியப்பட்டதும் ஒருவாற்றானும் அறியப்படாத சூனியமும் ஆகிய இரண்டும் அசத்தேயாதலால், சுட்டறிவினால் அறியப்படாத சத்தென்ற மெய்ப்பொருள், (உயிர் அத்துவிதமாய் நின்றறியத்தக்க) சிவனது திருவருளேயாம்.

குறிப்பு:—என்கண்ணி = எதனைப்பற்றி. தான் = அருள் சத்தி,—திருவடியென்றதும் இதுவே.

உணர்ப அசத்தாதல் ஒன்றுணரா(து) ஒன்றை
உணருநீ தான்உணராய் ஆயின்—உணரும்உனில்
தான்இரண்டாம் மெய்கண்டான் தன்னால் உணர்தலால்
தான்இரண்டாய்க் காணுன் தமி.

உரை:—அறியப்படுபவைகளெல்லாம் நிலையாப் பொருள் ஆதலின், அறிவில்லாத அவற்றுள் ஒன்றும் ஒரு முதல்வனை அறியமாட்டாது. அப்பொருள்களை அறியும் நீ தானும் முதல்வனை அறியமாட்டாய். நீ ஆராய்ந்து பார்ப்பின், அப்பொருள்களைப்போல அவனை அறியக் கூடுமாயின், அவன் உன்னில் வேறுவன். உண்மை யுணர்ந் தோன், இறையருளில் அடங்கிநின்ற இறையறிவோடு கூடிய தன்னறிவால் அறிதலான் அத்தனிமுதற்பொருளை அதனின் வேறாகநின்று அறிவானல்லன்.

குறிப்பு:—ஒன்றை = ஒரு பரம்பொருளை. தமி = தனி முதல்வன். இரண்டாம் = வேறாம்.

> பாவகமேல் தான்அசத்தாம் பாவநா தீதமேனிற்
> பாவகமாம் அன்றேன்னற் பாழதுவாம்—பாவகத்தைப்
> பாவித்தல் தானென்னில் பாவகமாந் தன்னருளால்
> பாவிப் பதுபரம்இல் பாழ்.

உரை:—மன முதலிய கருவிகளோடு பாவிக்கப்படுவ தானால், அது (சுட்டி யறியப்படும்) அசத்தாகும். அப் பாவனையைக் கடந்ததென்றால், (கருவிகள் நீங்கிய வழிப்) பாவனை யென்பது பெயர் மாத்திரமன்றி உண்மையில் இல்லையாம். இருவகையாகவு மன்றி, சொல்லவொண்ணாததா கப் பாவிக்கப்படுவதென்னில், அது சூனியமாம். (கிடை யாதபொருளைக் கிடைத்ததாகப் பாவிப்பது போலப்) பாவனை செய்தலென்னின், அது போலிப்பாவனையாம். ஆதலால் இறையருள்வழி நின்று நினைக்கப்படுவது பரம் பொருள். அது சூனியமன்று.

குறிப்பு:—யோகியர் கூறும் பாவனையால் இறைவனை அறிதல் கூடாதென்றவாறு. இரண்டாமடி முதலிற் பாவ கம் என்றது பயனில்லை யென்ற பொருளில் வந்தது

மூன்றாமடியிற் பாவகம்=போலிப் பாவனை. 'இல்பாழ்' என்பதைப் 'பாழ்இல்' என மாறுக.

அறிய இரண்டல்லன் ஆங்(கு)அறிவு தன்னால்
அறியப்படான் அறிவின் உள்ளான்—அறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யேபோற்
காட்டா(து) அறி(வு)அறிந்து கண்டு.

உரை:—உயிர் அறியும்படி அதனின் வேறாக நிற்பானல்லன். உயிரறிவுக்கு அப்பாற்பட்டு நுட்பமாய் அதன் கட்கலந்திருத்தலின், தனது அறிவின்கண்ணே உயிரால் அவன் அறியப்படான். உயிரால் பொருள்களை யறிகிற கண், சத்தாகிய உயிரினை அறியாமை போல, தனக்குப் பொருள்களை விளக்குவானாகி நின்ற முதல்வனை உயிரினறிவு கண்டறிந்து உயிர்க்குக் காட்டமாட்டாது.

குறிப்பு:—உயிர் தன்னறிவு கொண்டு முதல்வனை அறிய முடியாமை விளக்கியவாறு. ஆங்கு என்பதை 'அறிவின் உள்ளான்' என்பதன் இறுதியிலமைத்துப் பொருள் சொல்க. மெய்=சத்து, ஆன்மா. இறுதியடியில், அறிவு=உயிரறிவு. அறிந்து கண்டு, என்பதை, கண்டு அறிந்து என மாறுக.

அதுவென்றும் ஒன்(று) அன்று அதுவன்றி வேறே
அதுவென் றறியறிவும் உண்டே—அதுவென்(று)
அறிய இரண்டல்லன் ஆங்(கு)அறிவுள் நிற்றல்
அறியும்அறிவே சிவமும் ஆம்.

உரை:—சிவம் இன்னதென்றறியப்படாமையால் 'அது' வென்று சொல்லப்படும் ஒரு பொருளல்ல. அச் சிவத்தையன்றி, அதனை (வாக்கு மனாதீத மென்ற) அது என்று அறிகின்ற அறிவுப் பொருள் அதற்கு வேறே யுளது. உலகப் பொருள் போலச் சுட்டியறியும்படி வேறாக நில்லாது உயிரின் அறிவின்கண் கலந்து முதல்வன் நிற்றலின், அவனை அறிகின்ற அறிவுப்பொருளாய

உயிரும் கலப்பால், முதல்வனுயை சிவமுமாம் என்று சொல்லுமாறு உளதாம்.

குறிப்பு :—முதலடியில் முதல் 'அது' = சொல்லொணுதென்னும் பொருட்டு இரண்டாவது, அது = பரம் பொருள். இரண்டாமடி முதலில் 'அது' = மனம் வாக்கைக் கடந்தது. தனிச்சீரில், 'அது' = சுட்டுப் பொருள். இரண்டு = வேறு. 'அங்கு' என்பதை 'உண்டே' என்பதோடு முடிக்க. அறியுமறிவே = அறியு முயிரே, 'சிவமும்' என்ற உம்மையால், பொருட்டன்மையால் அது சிவமாகாதென்ற குறிப்புக் காண்க. தண்ணீரிலே உப்புக்கரைந்தவிடத்துத் தண்ணீரையும் உப்பென்பது காண்க.

ஏழாஞ் சூத்திரம்

யாவையுஞ் சூனியம் சத்(து)எதிர் ஆகலின்,
சத்தே அறியா(து) அசத்தில(து) அறியா(து)
இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா.

கருத்து :—மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை :—அசத்தாகிய உலகப் பொருளெல்லாம் சத்தாகிய சிவத்தின்முன் பாழாமாகலின், சத்து அசத்தை அறிதல் செய்யாது. அசத்தாகிய உலகம் அறிவிலதாகலின் ஒன்றையும் அறியுந் தன்மையுடையதன்று. சத்தையும் அசத்தையும் அறியும் இருவகைத் தன்மையுடையதாய்ச் சத்தேயாகவும் அசத்தேயாகவுமில்லாத சதசத்தாகி உயிர் உளது. (என அறிக.)

குறிப்பு :—சூனியம் = பாழ். இலது = அறிவிலது

கருத்து :—சத்திற்கும் அசத்திற்கும் வேறாகச் சதசத்துண்மை அறிவித்தல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது.

உரை:—இதன்கண், சுட்டாது அறியுஞ் சிவத்தின் முன் சுட்டி யறியப்படும் நிலையினாப் பொருட்டொகுதி விளங்கித் தோன்றாது.

ஏது.—மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

உரை:—இறைவனது இயற்கை புணர்வின் முன் செயற்கைச் சுட்டுணர்வு விளங்கி நில்லாமையால்.

அன்னியமி லாமை அரற்(த்) ஒன்(று) உணர்வின்றும்
அன்னியமி லான்அசத்தைக் காண்குவனேல்—அன்னியமாக்
காணுன் அவன்முன் கதிர்முன் இருள்போல
மாணு அசத்தின்மை மற்று.

உரை:—பசுபாசங்கள் தனக்கு வேறாகாது தன்னுள் அடங்கி நிற்றலையுடைய அரனுக்குச் சுட்டியறியக் கிடப்பது யாதுமில்லை. அவ்வாறு அன்னியமில்லாத முதல்வன் அசத்துப் பொருளை யறிவானாயின், தனக்கு வேறாக அவற்றைச் சுட்டி யறியான். கதிரவன் முன் இருள் மடங்குதல் போல, முதல்வன் முன், அவனது வியாபக அறிவுக்கு இயையாத அசத்துலகம் விளங்கி நில்லாமை அறிக.

இரண்டாம் அதிகரணம்

இனி, அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

உரை:—மேல், தத்துவவடிவாகிய உலகினுக்கு அறிவு இல்லை என்றவாறு.

ஏது:—அதுதான் நிருபிக்கில் இன்றாகலான்.

உரை:—ஆராயுங்கால் அதன்கண் (அறிவு) இல்லையாகலான்.

குறிப்பு :—உயிரினைந்தவழி, பொறி, கரண முதலியன அறிவுடையன போலத் தோற்றினும், உயிர் கலவாத இடத்து அவை தம்மிலே சடமாயுள்ளன வென்பார், 'நிரூபிக்கில்' என்றார்

பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றணுக
பேய்த்தேர் அசத்தாம் பெற்றிமையின்—வாய்க்குதனைக்
கண்டுணர்வார் இல்வழியிற் காணும் அசத்தன்மை
கண்டுணர்வா ரில்லல(து)எனக் காண்.

உரை :—கானலைத் தண்ணீரென்றெண்ணி, அதன்பாற் செல்லும் அறிவிலானுக்கு, அவன் அதையணுகுதலால் அக் கானல் நீரானது பொய்யாகுந் தன்மைபோல, நேர்பட்ட குருமொழியை ஆய்ந்தறிவாரில்லாதபோது, உலகப்பொருளிற் றோன்றும் நிலைத்த அறிவாந்தன்மை, ஆய்வாருள்ள போது அவர்க்கு இல்லாததாக விளங்குமென்றறிக.

குறிப்பு:—வாய்த்தது =கிடைத்தது இங்கே, குருமொழியென்பது வருவிக்கப்பட்டது வாய்த்தது என்பதற்கு, எதிர்ப்பட்டதை யென்றும் பொருள் கொள்ளலாம்

மூன்றும் அதிகரணம்

இனி, இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா என்றது.

உரை:—அசத்தும் சத்தும் ஒன்றையொன்றுணராததாகவே, இரண்டையும் அறிவதாகிய ஒன்று உண்டு. அஃது இரண்டின் தன்மையுமில்லாத உயிர் என்றது.

எது.—இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்று அவ்வறிவு இரண்டன்பாலுமுள்ளதாய் உள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை:—சத்தினையும் அசத்தினையும் அறியுந்தன்மையதாய், அறிவிக்க அறிவதாய் அவ்விரண்டினும் நிலைபெற்ற அனுபவ அறிவுள்ளதாயது எதுவோ, அதுவே சதசத்தாய உயிர் என்றவாறு.

குறிப்பு:—உபதேசி = அறிவிக்க அறிவது. இரண்டன் பாலும் நின்ற அறிவு உளதாய் என உரை நடை கொள்க.

அருவுருவா காதறிதல் ஆயிழையாய் ஆன்மா
அருவுருவும் அன்றாம் உண்மை—அருவுருவாய்த்
தோன்றியுடன் நில்லாது தோன்றாது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு.

உரை:—நுணுகிய நூல்களை ஆராய்கின்ற உயிரானது சத்தையும் அசத்தையும் தான் அறிதலை, அது (அறியப்பட்ட இரண்டுமும் வேறாதலால்) அறியப்பட்ட சத்து மாகாது, அசத்துமாகாது. அதன் உண்மைத்தன்மை, சத்தோடும் அசத்தோடும் ஈணிர்ச்சப்படத்தக்கதாய், மூன்றாவதொரு பொருளாய் உடனுறை நிலைத்து, சூனியப் பொருளாகவும் நில்லாது, இரண்டினும் சார்ந்ததன் வண்ணமாய்ப் பூவிலே வாசம் அடங்கித் தோன்றுமாறு போல, இரண்டினையும் அறியுங்கால், அவற்றின் சார்பா யறியப்படுவதா யிருத்தலாகும்.

குறிப்பு:—அரு = சத்து. உரு = அசத்து. ஆய் = நுண்ணிய, இழை நூலுக்கு ஆகுபெயர், ஆய் = ஆராய்கின்ற.

மயர்ச்சம தாற்றும் மருந்தில் தெளிதும்
பெயர்த்துணர்நீ சத்தாய்ப் பேசில்—அசத்தும்அலை
நீயறிந்து செய்வினைகள் நீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

உரை—(அறிவைவிளக்குங் கருவியின்வழி) அறியாமை அடைந்தும், நோய்க்கு மருந்து போல்வதாகிய அறியாமைக்கு மாற்றாகிய விளக்கமுள்ள வழி அறிந்தும், இங்ஙனமாறிமாறி உணர்ந்து வருகின்ற நீ ஒருதன்மையா யறியும் சத்தாகமாட்டாய் சொல்லப்படுகில, நீ செய்த வினைகளின் பயனை அறிந்து நீயே அனுபவிப்பதன்றி அசத்தாய பாசம் அறிந்து அனுபவியாமையால, நீ அசத்தும் அல்லாதாய். நீ இரண்டினும் வேறு.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையாது அசத்(து)ஆதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
தானே உளவன்றே தண்கடல்நீ ருப்புப்போல்
தானேய் உளம்உளவாய்த் தான்.

உரை நடை:—அஞ்ஞானம் மெய்ஞ்ஞானந் தன்னில் அசத்து ஆதல் விளையாது. மெய்ஞ்ஞானம் தானே உள அன்றே தான் ஏய் உளம் உளவா, தான் உள்ளம் அணைதல், தண்கடல் நீருப்புப்போற்காண்.

உரை:—அறியாமையானது, மெய்யறிவாகிய முதல் வன்முன் (ஒளிமுன் இருள்போல) நிலையாமையால் அவனிடத்தே உளதாகாது. அந்த மெய்யறிவன் என்று உள்ளானே அன்றே, தான் பொருந்துதற்குரிய உயிர்கள் இருப்பனவாக, அவ்வுயிர்களை அது பற்றி நிற்றல், குளிர்ந்த கடல் உப்பானது நீரைப்பற்றி இடத்தைப் பற்றாது நிற்குந்தன்மைபோல என அறிக.

எட்டாஞ் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

கருத்து :—ஞானத்தினை உணரு முறைமையினை யுணர்த்திற்று.

குறிப்பு:—ஞானம் = பதியறிவு.

சூத்திர உரை நடை:—தவத்தினில் தம்முதல்குருவுமாய் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என வுணர்த்த விட்டு அன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே.

உரை:—உயிர்களது தவமிகுதியால், அவற்றிற்கு உள் நின்றுணர்த்திய முதல்வன் குருவடிவாய் எழுந்தருளி வந்து, நீ ஐம்பொறிகளாகிய வேடருள் அகப்பட்டு வளர்ந்து நின் பெருந்தன்மையை மறந்தாய் என்று

உண்மை யறிவிக்க அறிந்து ஐம்புல வேடரை விட்டு நீங்கி, இறைவனோடு அந்நியமாகாத தன்மையில் நிலைபெற்று அவன்றிருவடிகளை அணையும் என்றவாறு.

முதல் அதிகரணம்

ஈண்டு, இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது.

உரை:—இதனுள், மேற்கூறிப் போந்த உயிர்களுக்குப் பல பிறவிகளில் இயற்றிய தவத்தின் பயனாக, இறைவன் அளிக்கும் சிவஞானம் உண்டாகும் என்றது.

ஏது.—மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்.

உரை:—முன்னேயே, சரியை, கிரியை, யோகமாகிய தவங்களைச் செய்த காலை, அவை வீட்டு நெறிக்குச் சாதனமாய சிவஞானத்தைக் கொடுத்தன்றி வீட்டினைத் தர வல்லன அல்லவாகலின்.

குறிப்பு:—தவத்தால் ஞானம் அடைந்தே வீடு கூடுதல் ஆகும். ஞானமின்றி வீடில்லை யென்றது.

> தவஞ்செய்தா ரொன்றுந் தவலோகஞ் சார்ந்து
> பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
> நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
> கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு.

உரை:—(சரியை, கிரியை, யோகம் என்னுந்) தவத்தை ஆற்றியவர்கள் ஒருதலையாகத் தவப்பயனடைதற்குரிய உயருலகினை யடைந்து (தவப்பயனை நுகர்ந்தபின்) உலகத்தினுள்ள பற்றினைப் பிறவியெடுத்து ஒழித்தற்பொருட்டு, தவஞ்செய்தற்குரிய நல்ல இனத்திலே வந்துபிறந்து சிவஞானம் நண்ணுவதைக் கற்றறிந்தவர் ஆராய்ச்சி தெரிந்து கூறும்.

குறிப்பு:—என்றும் = திண்ணமாக. உலகத்திற் பிறந்து அறப்பதாகிய பற்று இல்லாத விடத்து, தவலோகம் நின்றவாறே ஞானமடைவர் என்பது கருத்து. சாரபு = இனம், பழக்க முதலியவைகளைக் குறிக்கும். சாதியென்று பொருள் கொண்டு, இழிகுலத்தார்க்கு ஞானம் இல்லையென்பது தவறு. சூழ் = சூழ்ச்சி. கூட்டமென்றுங் கொள்ளுப. சுற்றறிந்தார் கூறுவதைச் சூழ்ச்சிமேல் வைத்துரைத்தார்

பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒத்தும்
இசைத்து வருவினையில் இன்பம்—இசைந்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தால்
மருவுவனும் ஞானத்தை வந்து.

உரை நடை:—இசைத்து வினையில் வரும் இன்பம், பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும். இசைத்த இருவினை இறப்பில் தவத்தால் ஒப்பில வந்து ஞானத்தை மருவுவன்.

உரை:—பயனைக் கூறிக்கொண்டு செய்யப்படும் புண்ணியங்களால் வரும் இன்பமானது, பசித்து உணவு உண்டு, அது அற்றவிடத்து மீட்டும் பசிப்பவனுக்கு அவ்வின்பம் எவ்வாறோ அவ்வாறாகும். பிறவியைத் தோற்றுவிப்பதில் சமமாயுள்ள நல்வினையும் தீவினையும் மிக்க தவத்தினால், ஒப்ப வெறுக்கப்படுமாயின், அத்தவ முதிர்ச்சியுடையான் ஞான குருவை நாடி வந்து சிவஞானத்தை அடைவன்.

இரண்டாம் அதிகரணம்

இனி. இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது.

உரை:—மேல், ஞானத்தை விரும்பும் உயிர்களுக்குப் பருவம் வந்தபோது உள்நின்று உணர்த்திவந்த அவர்கள் முதல்வனே, குருவாய் வெளிப்பட்டருளி அதனை அறிவுறுக்கும் என்றவாறு.

ஏது.—அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

உரை:—அவன், தூய உயிர்களின் வேறாகாது அவர்களது அறிவைத் தமக்கு வடிவமாகக் கொண்டு நிற்பனாதலின்.

குறிப்பு:—குருவாய்வருவா னறிவின்கண் இறைவன் ஆவேசித்து நிற்குநிலை கூறப்பட்டது.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்(கு)
அஞ்ஞான அச்சகலர்க் க) அக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்உணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்உணர்த்துந் தான்குருவாய் முன்.

உரை:—விஞ்ஞான கலர்க்கு உண்மை யறிவு இறைவன் உள்நின்றுணர்த்தத் தானே உண்டாகும். பிரளயாகலருக்கு அவ்வாறன்றித் தனது தெய்வ வடிவையே குருவடிவாகக் கொண்டு முன்னின்று ஞானத்தை உணர்த்துவன். அறியாமையுடைய சகலர்க்கு அவர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகிவந்து அவ்வடிவின் பின்னாக மறைந்துநின்று உண்மையறிவை நல்குவன்.

குறிப்பு:—விஞ்ஞானகலர் - விஞ்ஞானத்தாற் கலையற்றவர். பிரளயாகலர் பிரளயத்தாற் கலையற்றவர். சகலர்-கலையோடு கூடினவர். இவர்கள், முறையே ஒருமலம் இருமலம் மும்மலமுடையவர். அன்றிப் பிர....முன் என்பதை முதலடிக்குப் பின் வைத்துப் பொருள் கொள்ளுக. தன்மை, முன்னிலை, படர்க்கை யென்ற முறையில் உபதேசம் நிகழும் என்றவாறு.

அறிவிக்க அன்றி அறியா வுளங்கள்
செறியுமாம் முன்பின் துறைகள்—நெறியிற்
துறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடேன்
துறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

உரை நடை:—நெறியில் அறிவிக்க அன்றி அறியா உளங்கள். குறைவில் ஈசன் சூழ்கொள்பவர்க்குக் குறைகள் முன்பின் செறியும். குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடு என்.

உரை:—உயிர்கள் தமக்கு உரிய படிமுறையில் வைத்து முதல்வன் அறிவிக்க அறியும் இயல்பினவாகலான், குறை வில்லாத உலகமுதல்வன் உபதேசமொழியை வேண்டி நின்ற பிரளயாகலர், சகலருக்குக் குறையாகப் பெறுதற் குரியனவாய இன்றியமையா உபதேசம், முன்னிலை யிலும் பின்னிலையிலும் நிகழும். உபதேசமொழியை இன்றியமையாது வேண்டாத விஞ்ஞானகலர்க்கு இறை வனாற் கொள்ளப் பட்ட நிகழ்ச்சி யளவிலேயே வீடுபயக்கு முணர்வு உண்டாமென்று சொல்லுக.

குறிப்பு:—குறைகள் = முற்றுப் பெறுதற்கு இன்றி யமையாக் குறையாயிருந்தவைகள். பவம் = நிகழ்ச்சி. ஈசன் = உலக முதல்வன். சூழ் = உபதேசம்.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல்—இல்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.

உரை:—நல்ல மாணவனே! (ஏந்திய அணிகளையுடைய நங்கைக்குப் பிள்ளையைக் காணுமுன்) சுரக்காத முலைப் பாலும் கண்ணீரும் பிள்ளையைக் கண்டவுடனே தோன்று கின்றன. அவ்வாறே நீரில் மறைந்த நிழல்போல உயிர்க ளொடு கலந்து புலப்படாது நின்ற முதல்வனை, அவன் குருவடிவமாய் உருவெடுத்துத் தோன்றாவிடின், யார்தாம் அறிதல் கூடும்.

குறிப்பு:—அருவாய் = புலப்படாது.

மூன்றும் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணரா என்றது.

உரை:—மேல், இவ்வுயிர்கள் ஐம்பொறி யறிவுகளால் திரிபுணர்ச்சியுடையனவாய்த் தம்மை அறியமாட்டா.

ஏது.—அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

உரை:—பளிங்கிற் பொருந்திய நிறங்கள் தமது இயல்பினைக் காட்டுவனவன்றிப் படிகவொளியைக் காட்டாமை போல, ஐம்பொறியறிவுகள் தமக்குப் புலனாயவிடயங்களையே உயிர்க்குக் காட்டி நிற்றலால்.

குறிப்பு:—ஒவ்வொரு பொறியும் தனக்குப் புலனாயதையே காட்டு மென்பார், 'காட்டிற்றை' என ஒருமையாற் கூறினர்.

பன்னிறங் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

உரை:—பளிங்கானது தன்னைச் சாரப்பட்ட பல நிறங்களையே காட்டி நிற்பதுபோல, சார்ந்த பொறிகளின் தன்மையையே தன்மாட்டுக் காட்டும் தனது பொதுவியல்பை நினைந்து பல் நிறங்கள் படிகத்திற்கு வேறு என்றறியுமாறுபோல, பொதுவியல்பைக் காட்டும் பொறிகளைத் தன்னின் வேறென அறிந்து, அப் பொதுவியல்பு நிலையாதொழியுமாறு, தனது சிறப்பியல்பை யுணர்ந்தோன் (அசத்தாகிய பொறிகளுக்கு) வேறாகிய மெய்ப்பொருளாகிய தெய்வத்தின் அடிமையாவன.

குறிப்பு:—பொய் = பொதுவியல்பு. மெய் = சிறப்பியல்பு. தைவம் = தேவனுடைமை. இறுதியடியில், 'வேறு' மெய்ப்பொருட்கு என்பதோடு முடிவது.

நான்காம் அதிகரணம்

இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறவான் காணவே, தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

உரை:—மேல் தவமுற்றிய உயிரானது, தன்னை ஐம்பொறிகளுக்கு வேறுகவுணாவே, தமது தலைவனது திருவடியை அடையும்

குறிப்பு:—இந்திரியத்துக்கு வேறுகக் கேவல நிலையடையாது என்பார், 'சாணவே' என்றார்.

ஏது.—ஊசல் கயிறற்றல் தாய் தரையேயாக துணையான்.

உரை:—ஒருவன் ஏறியிருந்து ஆடுகின்ற ஊஞ்சல், அது தொங்கவிட்டுள்ள சயிறு இற்றுவிழநேரின், உற்றுழியுதவுந் தாய்போல அதற்குத் சாரகமாக உதவுவது நிலனேயா மாதலால்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன்உணர்வில் தீர்ந்து—சிறைவிட்(டு)
அலைகடலிற் சேன்றடங்கும் ஆறுபோல் மீளா(து)
உலைவிலரன் பாதத்தை உற்று.

உரை:—அணையை உயர்த்துக்கட்டித் தடை செயதலினால் தேக்கிநின்ற ஆற்றுநீர்போலப் பாச ஞானங்களால் வியாபகம் தடைப்பட்டுநின்ற உயிரானது, தடைநீங்கிய காலததே கடலின்கட் சென்றடங்கி மீண்டு பிரிந்துவாராத ஆற்றுநீர்போல, தனக்குத் தடைசெய்கின்ற பொறியுணர்வு நீங்கியவழி, கேடில்லாத சிவபெருமானது திருவடிகளை யடைந்து அத்திருவடி நிறைவேயாய் அதன்கண் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது.

எவ்வுருவுந் தான்என்னில் எய்துவா ரில்லைதாள்
இவ்வுருவில் வேறேல் இறையல்லன்—எவ்வுருவுங்
கண்போல் அவயவங்கள் காணுஅக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

உரை:—ஐம்பொறியுணர்வு உள்பட எவ்வகை யுணர்வும் இறைவனே என்றால், அவனைப் போயடைய விரும்புவார் யாரும் இல்லை. உயிருணர்வோடு இறைவன், தொடர்பில்லானென்னில், அவன் முழுமுதல்வன் ஆகான். கண் போலப் பிறபொறிகள் புலன்களைச் சென்று பற்றுவன வல்ல. அதுபோலப் பொறியுணர்வும் உயிருணர்வும் ஒரு தன்மையனவல்ல. கண்ணில்லாதவர் கண்பெற்றவிடத்தே, அவர்கள் அநுபவத்தால் அத்தன்மைத்தாய வெற்றியை அறிக.

குறிப்பு:—கழல் = வெற்றி. பிற பொறிகளினு மிகுதியாயுள்ள வியாபகச்சிறப்பு. புலன் உணர்வு பற்றியதை யறியும். உயிருணர்வு, வியாபித்தறியும். பிற அவயவங்கள் பொறியுணர்வுக்கும், கண், உயிருணர்வுக்கும் உவமையாயின.

ஐம்பொறியின் அல்லையெனும் அந்த ரசிவனை
ஐம்பொறியை விட்டங்(கு) அணைசகலன்—ஐம்பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்க நினைந்து.

உரை:—ஐம்பொறிகள்போல, அளவுபட்ட விளக்கம் உடையவனல்லாய் என்று அறிவுறுக்கப்பட்ட முடிந்த உபதேச முடையவனே! ஐம்பொறிகளை விட்டுச் சிவனை அடைகின்ற சகலனாகிய ஆன்மா, ஐம்பொறிகளோடு இருத்தல் பற்றிச் சிவனைவிட்டு நீங்கமாட்டான். நீர்மேலே பரந்த பாசியைப்போல, நீங்கக்கூடிய ஆணவமலம், வினை முதலியன வாசனை வயமாக வந்து கூடுமாயின், தன்னை நீங்காத முதல்வனை நினைந்து அவற்றைவிட்டு விலகுவன்.

குறிப்பு:—அந்தர = முடிவான சொல்லுடையவனே. இறுதியில், 'நினைந்து நீங்கும்' என மாறுக.

ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

கருத்து:—ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்த்துதல் நுதலிற்று.

உரை:—குறைவான அறிவாகிய பாசஞானத்தா லறியப்படாத முதல்வனை அவனது திருவடி ஞானமாகிய கண்ணினால், அறிவின்கண்ணே ஆய்ந்தறிக. ஒருவரும் ஏறிச்செலுத்தாத விரைவுடைய பேய்த்தேராகிய கானல் போலப் பாசக்கூட்டம் நீங்கி யொழிய இறைஞானமானது பிறவித்துயராகிய வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அக்காட்சி சலியாமைப் பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவைந்தெழுத்தை விதிப்படி தியானிக்க.

குறிப்பு:—கண் = அறிவு, சிந்தை = உயிரறிவு. நாடி = நாடுக. உரா = ஊராத. துனை = வேகம். ஒருவ = நீங்க. பதி = இறைஞானம். எண்ணு = நினை.

கருத்துப் பொருள்:—வாசனை மலம் தாக்காது உயிரினைப் புனிதமாக்குவதை உணர்த்துதல் கருதியது.

முதல் அதிகரணம்

கண்டு அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க என்றது.

உரை:—வெளிப்படை.

ஏது.—அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

உரை:—பாச பசுஞானங்களுக்கு அப்பாற்பட்டுப் பதியறிவாலே அறியத்தக்கவனா யிருத்தலால்.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை—நாடியான்
தன்னாலே தன்னையுங் கண்டு தனைக்காணார்
என்னும் எனஅறிவார் இன்று.

உரை:—(இடை, பிங்கலை முதலிய) நாடிகளோ, எலும்போ, நரம்போ, தண்ணீர் கோழை முதலியவற்றுள் யான் யார் என்று தேடியும் என்னை அறிகின்றிலேன் என்று தேர்ந்தறியும் அறிவின்கண்ணே ஆய்ந்தால், விளங்கித் தோன்றுவதாய அரனது பேரறிவாலே அரனை யறிந்து அவனுளடங்கி நின்றறியும் பொருளாய தம்மை யறிய மாட்டாதார் முத்திக்காலமாகிய இப்போது தம்மை எவ்வியல்பினரென அறிவார்.

குறிப்பு:—பாசங்களுள் ஒன்றல்லன் ஆன்மா வென்பதறிந்து, இறையறிவு பெற்ற காலத்தே அவன் வியாபகத்திலடங்கிய ஆன்மாவை இறையறிவாற் காணப்பெறுதல் கூடும். அவ்வாறன்றி வேறு எவ்வாறு உயிரை அறிதல் கூடும் என்றவாறு. 'இன்று என் என அறிவாராம்' என இறுதியடிக்கு உரைநடை கொள்க.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா—காட்டிய
உள்ளந் தனைக்காணா துள்ளத்திற் கண்ணாய
கள்வன்றன் உள்ளத்திற் காண்.

உரை:—உயிரால் ஒன்றைக் காட்டப்பட்டுக் காண்கின்ற கண்ணானது தன்னை யறியமாட்டாது. தனக்குப் பொருள்களைக் காட்டுவதாய உயிரையும் அறியமாட்டாது. அதுபோல முதல்வன் காட்ட ஒன்றைக் காண்பதாய உயிர் தன்னையு மறியாது தலைவனையு மறியாது. உயிரின் தேர்ச்சி அறிவின்கண் உடனாய் நிற்கும் மறைபொருளாகிய முதல்வனை அவ்வறிவிலே நாடித் தெளிவாயாக.

குறிப்பு :—காட்டிய = காட்டப்பெற்ற, உள்ளம் = உயிர். மூன்றாம் அடியில், கண் = அறிவு.

இரண்டாமதிகரணம்

இனி, அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரப்பாற்று.

எது:—வேற்றியலாகிய வன்ன பேதங்களை வேற்றியல் பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது, படிக சொரூபமாந் துணையான்.

உரை:—படிகத்தின் பாலுள்ள நிறவேற்றுமைகளை படிகத்தின் குணமல்லவென்று கழித்தவிடத்து, எஞ்சி நிற்பது படிக வியல்பாகுமாதல்போல, நிலையானபொருளை அறியும் ஞானத்தை மறைத்துநிற்கும் அசத்துப் பொருள்களினுணர்வை நிலையிலாதனவென ஆசிரிய மொழியில் உறைத்து நின்றுகண்டு கழித்தவிடத்தே, தோன்றி விளங்குவது சிவஞானத்தின் வடிவமென் றறியற் பாலது.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்—அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானோ
வானோ முதல்களையின் வந்து.

உரை நடை:—நாலாமடியை மூன்றாம் அடிக்குமுன் கொள்க.

உரை:—குண ரூபமாக அறியப்படும் அசத்தமாயா காரியங்களையும், மலகன்மகாரிய வடிவாயறியப்படும் கலப்புப் பிரபஞ்சத்தையும், நிலையில்லாத இன்பவடிவாய் விளங்குஞ் சுத்தப் பிரபஞ்சத்தையுங் கடந்தவனாய், உயிரி னுணர்வுக்கு மேற்பட்டவனாய் நின்ற சிவஞானத்தா லன்றிப் பிறவற்றாலறியப்படாத முதல்வன், ஆகாய முதலிய வற்றை அசத்தென நீக்கியவிடத்து, இன்னதென்றறிய

வாராத சூனியப் பொருள்போலத்தோன்றி, உயிரின் அகண்ட அறிவின்கண் நீங்காது நிலைபெறும் பேரறிவாய்த் தோன்றுவான்.

குறிப்பு:—குணதத்துவ மூலமாகிய பிரகிருதியைக் கடந்தவன் என்பார் 'நிர்க்குணன்' என்றும், ஆணவம், வினை முதலியவற்றின் சார்புடைய அசுத்தமாயையைக் கடந்தவன் என்பார் 'நின்மலன்' என்றும், சுத்த தத்துவங் களையுங் கடந்தவனென்பார் 'நித்தியானந்தன்' என்றும், உயிராகிய தனக்குப் பரமானவர் என்பார் 'தற்பரம்' என்றும், சிவஞானத்தாலேயே அறியப்படுதலின் 'தனி' யென்றும் உரைத்தார். அற்புதம் = சூனியம். ஆறு = நீங்கா. 'வானே' என்பதில் ஏகாரம் அசை. முதல் = முதலிய வற்றை.

சுட்டி புணர்வதனைச் சுட்டி யசத்தென்றாச்
சட்ட இனியுளது சத்தேகாண்—சுட்டி
உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவரும்
புணர்ந்ததனும் போய்விட்டுப் போம்.

உரை:—சுட்டி யறியப்படும் பொருளை அசத்தென்று சுட்டி யறிந்து கழிக்கவே, முடிவாய்ச் செப்பமாயுள்ளது சத்தாகிய சிவமே யென்றறிக. சுட்டிப் பொருளோடு சார்ந்தறிந்து வந்த நீ, அதனின் வேறான சத்தாக மாட்டாய். நீ சத்துப்பொருளுக்கு அடிமையாய் அதனைச் சேர்ந்தால் சுட்டுணர்வு உன்னை விட்டொழியும்.

குறிப்பு:—சத்துப் பொருள் அசத்தின் வேறென்று மேற் காட்டினமையால், அசத்தினொடு சார்ந்து சுட்டுணர் வுடைய நீ சத்தாகமாட்டாய் என்றவாறு. சட்ட = செப்ப மாக. இனி = முடிவில் தைவம் = அடிமை. உண்மையை = உண்மைக்கு, சத்துப் பொருட்கு. பொய் = சுட்டுணர்ச்சி.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
அண்டனை யான்மாவில் ஆய்ந்துணரப்—பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா(று) உத்தமனின் ஒண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றன்.

உரை:—சுட்டறிவாற் கண்ட பொருள் ஒவ்வொன்றை யும் இது சத்தன்று இது சத்தன்று எனக் கழித்து உயிரறிவின்கண்ணே சுட்டுணர்வில்லாது நின்ற தேவனை ஆராய்ந்து அத்துவிதமாய் அவனைப் பாவித்துணர்ந்தால், அப்பாவனையில் விளங்கித்தோன்று முதல்வனால், சுட்டு ணர்வு ஒழியுமுறை, கருட தியானத்தால் விடம் நீங்கு வதுபோலாகுமென்க.

குறிப்பு:—அண்டன் = தேவன், கடவுள். உணர = அத்துவித பாவனையால் உணர. சானம் = தியானம். ஊனம் = சுட்டுணர்வு.

மூன்றும் அதிகரணம்

இனி, இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது.

உரை:—பதியை ஞானக்கண்ணால் நாடிய பின்னர் அவ் விடத்து முத்தி பஞ்சாக்கரமாய பிரணவத்தை அதன் பொருள் அறிவின் விளங்கும்படி அறிவிலே கணிக்க என்றவாறு.

ஏது.—இவ் வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும், அஞ் ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல, நோக்கிற்றை நோக்கி நிற்கு மாகலின், அதனை நீக்குதற்கு எனக்கொள்க.

உரை:—வேப்பங் கனியைத் தின்று சுவைகண்ட புழு, கரும்பைத் தின்றபோதும், பழக்கத்தினாலே முன் தின்ற வேம்பை நோக்கி நிற்குமாறுபோல, பக்குவமடைந்த ஆன்மாக்களுக்குச் சிவஞானம் விளங்கிய காலையும், வாசனை

வயத்தால் பண்டைச் சிற்றுணர்வை நோக்கி நிற்கு மாதலின், அவ்வாசனையை நீக்குவதற்கு என்க.

அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்(து) இதயத்தில்—அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு.

உரை:—உயிர் சிவனுக்கு உடைமைப்பொருளாதலை ஐந்தெழுத்து ஓது முறையினால் அறிந்து இதயத்திலே அஞ்செழுத்தினாலமைந்த முதல்வன் திருமேனியில் (கொல்லாமை, பொறியடக்கம், பொறுமை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு) என்னும் எண்மலர் தூவி வழிபட்டு அஞ்செழுத்தினால், குண்டலிக்தானமாகிய உந்தியிலே ஞான அனலை யெழுப்பி, அதன்கண் ஓமஞ் செய்து, புருவநடுவில் (அஞ்செழுத்தில் சிகர யகர வகரங்கள் நிற்குமுறையை) நினைப்பின், இறைவன் விளங்கித் தோன்றுவன். உயிரும் அவனுக்கு அடிமையாய் விளங்குவன்.

குறிப்பு:—கோதண்டம் = இமை, அஃதாவது புருவ நடு. சானிக்கில் = தியானிக்கில்.

இந்துவிற் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணும்—உந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆள்தானும் ஆம் ஏ(து) அஞ்செழுத்து.

உரை:—சாதாரணமாய்க் காணப்படாத இராகு கேதுக்களைக் கிரகண காலத்தில், சந்திரனிலும் சூரியனிலுங் கண்டாற்போல, உள்ளத்தின்கண் அஞ்செழுத்து முறையில் வைத்துச் சிந்தித்தால், கடைந்தகாலை பிறகிற்றோன்றும் நெருப்புபோல, சிவன்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கிநிற்பன். அப்பொழுது உயிர்தானும் நெருப்பைச்

சேர்ந்த இரும்புபோலப் பெருமானுக்கு அடிமையாகும். ஆதலால் திருவஞ்செழுத்தை விதிப்படி எண்ணுக.

குறிப்பு:—கேது கூர்மமே விளங்கக் கிடந்தது இந்துவையும் பானுவையுங் கூறினமையால். உந்தவே = கடையவே. காட்டாக்கி = காட்டத்தின் அக்கினி.

மண்முதல் நாள(ம்) மலர்வித்தை கலாநபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும்—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணாம்
நிலையதிலாம் அச்சிவன்தாள் நேர்.

உரைநடை:—நண்ணில், மண்முதல், நாளம், மலர், வித்தை, கலாரூபம், ஈசர், சதாசிவமும் கலையுருவாம். சத்திநாதம் அதன் கண்ணும். அச்சிவன்தாள், அதில் நிலையாம் நேர்.

உரை:—தியானிக்குமிடத்து, மண் முதல் பிரகிருதி வரையுள்ள தத்துவங்கள் உந்தியில் நின்று மேலெழுந்த தண்டு. வித்தியாதத்துவமேழும் சுத்த வித்தையும் எட்டிதழ்த் தாமரைப்பூ. அதன் கேசரங்கள் அவற்றிற்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுர தத்துவமும் சதாசிவ தத்துவமும். சத்திதத்துவம், தாமரைப் பொருட்டு. சிவதத்துவம், அப் பொருட்டிலுள்ள வித்துவடிவமாம். அம் முப்பத்தாறு தத்துவங்களாலாகிய இருக்கையிலே, அச்சிவனது சத்தி நிலைபெறும். அதனை அறிந்து வணங்குக.

குறிப்பு:—கேசரம் = தாது. பொருட்டு = கொட்டை. கலை, அறுபத்து நான்காதலின், கேசரம் அறுபத்து நான்கிற்குவமையாம. கலை யுருவு = கலைக்குள் உருவு, பொருட்டு. சத்திக்கு மேல் சிவமென்பது குறிப்பாலுணர்க.

பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக ளுகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

இ - ள் :—பாச க்ஷயம் பண்ணுமாறுணர்த்துதல் நுதலிற்று.

உரை :—உயிர்கள் கட்டுற்ற காலத்திலே, இறைவன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்து நின்ற அம்முறையே, உயிர் முதல்வனோடு ஒற்றித்து நின்று தானென வேறு காணப்படுமாறில்லாமல், இறைவன் கட்டளையில் வழுவாது நிற்கவே, ஆணவமலம், மாயை என்பவற்றோடு, கொடிய வினையும் இல்லையாய் ஒழியும்.

கருத்து :—(முற்றிலும்) பாசநீக்கம் பண்ணும் வகை யுணர்த்துவதைக் கருதியது. இச்சூத்திரம் திருவருட் பேற்றினை யுணர்த்துவது.

முதல் அதிகரணம்

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனுகி நிற்க என்றது.

உரை :—சூத்திரப் பொழிப்பால் விளங்கும்.

ஏது.—அவ்வாறு நிற்கவே யான் எனது என்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

உரை :—அங்ஙனம் ஒற்றுமைப்பட்டு நிற்றலால், யானும் எனதும், எனப் பகுத்துணருந் திரிபுணர்ச்சிக்குக் காரணமாய் மலம் நீங்கி அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறும் ஆதலின்.

நான்அவன்என் றெண்ணினர்க்கு நாடும்உளம் உண்டாதல்
தான்எனஒன் றின்றியே தான்அதுவாய்—நானெனவோன்(று)
இல்லென்று தானே யெனும்அவரைத் தன்னடிவைத்(து)
இல்லென்று தானும் இறை.

உரை:—யானென்றும் அவனென்றும் பகுத்துணர் வார்க்கு நானே என்பார்க்குப் போல, உயிருணர்வு முனைத்துத் தோன்றுமாதலின், தான் என்று ஒரு முதல் காணப்படுமாறின்றித் தான் இறை யுணர்வு மயமாய், நான் என்பதொன்றில்லை, எல்லாம் இறைவனே யென்று தெளிவடைவாரை இறைவன் தனது திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்குமாறு வைத்து அவர்களுக்குத் தானே முழுவதுமாய் விளங்குவன்.

குறிப்பு:—எண்ணினர்க்கும், என்றமையால், நானே என நிற்பார்க்கும் என்பது வருவிக்கப்பட்டது. உளம் = உயிருணர்வு. அது = பரம்பொருள். இறுதியடியில் இல்லென்று = அடங்கி நிற்ப, 'இறைதானும்' என மாறுக.

இரண்டாம் அதிகரணம்

இனி, இறைபணி வழுவாது நிற்க என்றது.

உரை:—இறைவன் அருட் கட்டளையின்கண், தவறாது சலிப்பின்றி நிலை பெறுக என்றவாறு.

ஏது—அவன்அருளால் அல்லது ஒன்றையுஞ் செய்யான், ஆகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியா ஆகலான்.

உரை:—அவன் அருள்வழிநின்றே செய்வனவெல்லாம் உயிர் செய்யுமாறுல், திரிபுணர்ச்சிக்குக் காரணமாகிய மாயாகாரியங்களும் வினையும் ஏகனுகி நிற்பதற்குத் தடையாய் வந்து தாக்கமாட்டாவாதலின்.

குறிப்பு:—அஞ்ஞானமும் கன்மமும், என விரிக்க. ஏகனுகி 'நிற்பதால்,' ஆணவ மலமுப, பணியின் வழுவாது நிற்பதால், மாயை கன்மங்களும் தாக்கா என்றனர்.

நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்லவழி
நாமல்ல நாமும் அரன்உடைமை—யாமென்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்(கு) இல்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்.

உரை :—இந்திரியங்களாகிய பொறிகள் மாயாகாரிய மாவனே யன்றி, யாம் அல்ல. அவை முதல்வனால் தொழிற் படுவனவன்றி, நமது வசமாயுள்ளன அல்ல. அவை தொழிற்படுதற்கு வாயிலாகிய விடயங்களும் மாயா காரியமாவனவன்றி நாமல்ல. அவ்விடயங்கள் செயற் படுதலும் முதல்வனாலன்றி நம் வசமாக அன்று. அவை போல நாமும் சிவனது உடைமைப்பொருளே. நாம் அறி வதும் செய்வதும் இறைவன் அருள் விளக்கத்தினாலேயாம் என்று உணர்ந்தால், இவ்வடிமைத் திறமுடையார் எவ் வுடம்பில் நின்று எவ்வினைகளைச் செய்தாலும் வினையா லாகிய பந்தம் இல்லை. பிராரத்த வினையும், இறைவன் திரு முன் உடல் நியதியாகக் கழியும். (எதிர் வினையாகிய ஆகாமியத்திற்கு வித்தாகமாட்டாது).

குறிப்பு :—நம் வழியின் = நமது வசத்தில். வழிநாம் அல்ல = வாயில் நாம் அல்ல. வாயிலென்றது விடயங்களை. 'நம் வழியினல்ல' என்பது, இந்திரியத்திற்கும் 'வழி' என்பதற்கும் நடுநிலையாக நின்றமையின், இருபாலுங் கொள்ளப்பட்டது. பணியார் = பணியுடையார், அடிமைத் திறமுடையார். முற்செய்வினை = பிராரத்தம். தருவான் = ஊட்டுவிக்கு முதல்வன். முன் = சந்நிதி.

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்ஆதல்
சார்ந்தாரைக் காத்தும் சலம்இலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாய்ச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.

உரை :—அடைக்கலமெனச் சார்ந்தவரை அவர்க்கு வரும் இடர்களை நீக்கிக் காத்தல் தலைமைக் குணமுடை

யவர் கடன் ஆதலால், முதல்வன் தன்னை யடைந்தவர்களைச் சிறப்பாகப் பாதுகாப்பானாகியும், அதுபற்றி ஒருபாற் சார்வு இல்லாதானாய், தன்னைச் சார்ந்து தன் அடித் தொழில் செய்வாரைத் தன்போல, வரும்வினைத் தொடர் பிலராக்கி, பிறர்க்கு அவரவர் வினையினை விளைத்தலால், நணுகி வந்து பொருந்தும் பிராரத்தவினை, ஆகாமியஞ் சாராமை போலவே உயிர்ச்சார்பின்றி ஒழியும்.

குறிப்பு:—சலம்=பட்சபாதம். தங்கள் வினை = தத்தம் ஆகாமிய வினை. ஆய்ந்து = நணுகி. ஆர் = பொருந்து. முற் செய்வினை = பிராரத்தம்.

> இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபால்
> முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
> மாயையுடன் நில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
> ஆயஅத னால்உணரும் அச்சு.

உரை:—பெருங்காயம் வைத்த பாத்திரத்தின் காய வாசனை மெலிதாய்த் தோன்றுதல்போல, சிவஞானியிடம், வாசனையால், தன்னுணர்வு தோன்றிப் பிராரத்தமும் அதற்கு வாயிலாகிய மாயாகாரியங்களும் வந்து மூளுமானாலும், (பிறர்க்கு) அப்பிராரத்தத்தோடு கூடி வருவதாய) ஆகாமியம் தனக்கு வாயிலாகிய மாயா காரியங்களோடு கெட்டொழியும். (மேற் பிறவிக்கு வித்தாகாது). ஞானியாய அவன் சிவமாய சத்தேயாய் நிற்றலால், (தன்னைப் பிறழவிடாத) அச்சாகிய சத்தையே அறிந்து நிற்பவன்.

குறிப்பு:—முன்செய்வினை = பிராரத்தம். பின் செய்வினை = ஆகாமியம். மாயையுடன் நில்லாது = மாயை யுடனாய் ஒழியும்: எடுத்த உடம்போடு நீங்கும். மெய்ப் பொருள் = சத்து. அச்சு = வார்ப்பு: பதிந்தபடியே இருப்பது. அடையாளம், உயிரெனவுங் கொள்ளுப. உயிர்க் குயிராகிய கடவுளை அச்சென்றார்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினும்—எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்
அவர்திறன் நீங்கார் அதற்று.

உரை:—பிருந்த தீயினால் வேவாத அனற்கட்டுடைய நல்ல மந்திர வலியுடையோரைப்போலவும், செவ்வையாகச் செலுத்துதல் அறிந்து குதிரைமேலேறி அதன் வேகத்தாற் கீழே விழாது அதனைச் செலுத்துவோர் போலவும், ஐம்புலனில் அகப்படாமைக்குரிய சூழ்ச்சி அறிந்து முதல்வன் திருவடியை உணரவல்லார், பிராரத்தத்தால், ஐவகைவிடயங்களிற் சென்றாலும், தமது அருள் திறமையின் நீங்கிக் (கட்டுப்படமாட்டார்).

குறிப்பு:—தவர் = மந்திரவலியுடையர். பாகர் = செலுத்துவோர். அமர = பொருந்த. மா = குதிரை.

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக்—கதமிக்(கு)
எரிகதிரின் முன்னிருள்போல் ஏலா அசத்தின்
அருகணையார் சத்தணைவார் ஆங்கு.

உரை:—தான் சதசத்தென உண்மை யுணர்ந்தவன் சத்தாகிய முதல்வனது அருள்வழியே நின்று எவற்றையும் பார்ப்பின், பாசமாகிய அசத்து அவனுக்கு இன்பஞ் செய்யாமையால், சிற்றமிகுந்து எரிகின்ற தீமுன் இருள் போல சத்தாகிய திருவருள்முன், அசத்து தனது வலி மடங்கிவிடு மாதலின், சத்தை அணைந்தவர் அவ்விடத்தே அசத்தைச் சாரமாட்டார்.

குறிப்பு:—கதம் = விரைவு; வேகம் என்றலு முண்டு.

பதினோராஞ் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

கருத்து:—பரமேசுரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை:—காட்டக் காணும் இயல்புடைய கண்ணுக்கு உருவத்தைக் காட்டித் தானும் காண்கின்ற உயிர்போல, உயிர் பொருள்களை அறியும்படி முதல்வன் அதனோடு இயைந்துநின்று அறிவித்து அறிந்து வருதலால், அவ் உபகாரத்தை மறவாது சடைப்பிடித்துச் செய்யும் அன்பாலே, முதல்வன் திருவடியாகிய சிவானந்த அநுபவத்தை எய்தும்.

குறிப்பு:—கண்டு காட்டலின் என்பதைக் காட்டிக் காணலின் எனக்கொள்க. அயரா = மறவாத. உள்ளத்தை = உள்ளத்துக்கு, உயிர்க்கு.

கருத்து:—பரமசிவனால் விளையுஞ் சிவானந்தாநுபவங் குறித்தல் கருதியது.

முதல் அதிகரணம்

கண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணரும் என்றது.

உரை:—முதல்வனும்; உயிர்களால் உணரப்படும் பொருள்களை உடன்நின்று அறிவன்.

ஏது.—இவ்வான்மாக்கள் அவனை இன்றியமைந்து ஒன்றையும் விடயியா வாகலான்.

உரை:—(விளக்கொளி கண்ணொளியொடு கலந்து கண்ணொளியொடு உருவத்தினுங் கலந்தாலன்றிக் கண் உருவத்தைக் காணாமைபோல) முதல்வன் அறிவு உயிரொடு

விரவிநின்று உயிரறிவொடுகூடச் சென்று பொருளினுங் கலந்தாலன்றி ஒன்றையும் உயிர் அறியாதாகலான்.

ஐந்தையும் ஒக்க உணரா(து) அவற்றுணர்வ(து)
ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான்—ஐந்தினையும்
ஒன்றொன்றப் பார்த்துணர்வ துள்ளமே எவ்வுலகும்
ஒன்றொன்றப் பார்க்கும் உணர்ந்து.

உரை நடை:—உள்ளம் அவற்றுள் ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான், ஐந்தையும் ஒக்க உணராது; ஐந்தினையும் ஒவ்வொன்றாய்ப் பார்த்துணர்வது. ஒன்று எவ்வுலகும் ஒன்றா உணர்ந்து பார்க்கும்.

உரை:—ஆன்மாவானது பொருள்களை அறியுங்கால் ஐம்பொறிபோல அதுவதுவாய்ச் செறிந்து அறியுந் தன்மைத்தாதலான், ஐம்புலன்களையும் ஒருங்கே உணரமாட்டாது. அவ்வைந்தினையும் ஒவ்வொன்றாக அறிந்தனுபவிக்கும். ஆனால், என்றும் ஒரு பெற்றித்தாய சிவம், எல்லா உயிர்களுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவகையான் ஒருங்கே உணர்ந்து அவ்வுயிர்களுடன் நின்று சிறப்புவகையாக அறியும்.

ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தானவினை தந்த போற்றினான்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ஆனான் உள்ளுவார் உள்கிற்றை
உள்ளத்தால் காணானோ உற்று.

உரை:—(உயிரானது) ஒன்றாகிய முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நின்று அவன் இரண்டு திருவடிகளையும் அறியவே அம்முதல்வன் பரபோகமாய் விளங்கின பொலிவுடையனாதலாலும் உயிரறிவின்கண்ணே ஒற்றுமைப் பட்டுப் பொருந்தினவனாதலாலும் கருதுவார் கருதுகின்ற தன்னை அவரறிவோடு கூடிநின்று அறியமாட்டானோ? (அறிவான்).

குறிப்பு:—உள்கிற்றை = கருதிய முதல்வனை. உள்ளத்தால் = உயிரறிவோடுநின்று. உற்று = பொருந்தி

இரண்டாம் அதிகரணம்

இனிப் பக்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது.

உரை:—வெளிப்படை.

ஏது.—அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான்.

உரை:—அவன் வேறுநில்லாது செய்வோர் செய்வன வற்றை அறிந்து செய்திக்குத்தக்க பயனைப் பெறுவித்தலால்.

அருக்கன்நேர் நிற்பினும் அல்இருளே காணர்க்(கு)
இருட்கண்ணே பாசத்தார்க்(கு) ஈசன்—அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல்அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தில் தன்உணர்த்தார் நேர்.

உரை:—கதிரவன் எல்லார்க்கும் ஒப்ப விளங்கினாலும், காட்சியில்லார்க்கு இரவிலுள்ள இருட்டுப்போல்வதாம். அதுபோல, பாசமுடையவர்களுக்கு இறைவன் இருளிடத்தனுவான். (மலரும் பருவத்துத்) தாமரையைக் கதிரவன் அலர்த்துவதுபோல, பேரன்பால் தன்னை உணர்வார்க்கு நேரான தனது திருவருட்பார்வையால இறைவன் பாசத்தை நீக்குவன். ஆதலால், சீவன்முத்தரும் பிறரும் ஒருதன்மையரல்லர்.

குறிப்பு:—அல் = இரவு. காணர்க்கு அல்லிருள் என மாறுக. இருட்கண் = இருளிடம் பகல் = கதிரவன். நேர் என்பதை 'அருட்கண்ணால்' என்பதனோடு முடிக்க.

மன்னும் இருளை மதிதுரந்தவா(று) அன்பின்
மன்னும் அரனை மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்.

உரை:— (இரவில்) நிலைபெறும் இருளைப் பிறையானது நாள்தோறும் சிறிது சிறிதாக ஓட்டுகிறதுபோல, உயிர்கள்பாற் பேரன்புடைய முதல்வன், உயிர்களின் பாசத்தைச் சிறிது சிறிதாக நீக்கிக் காந்தம் இரும்பைத் தன்பால் வலிந்து இழுத்துத் தன் வசமாக்கிக்கொள்ளுதல் போல, உயிரின் மலம் நீங்க நீங்கத் தனது அருட்சத்தியைப் பதிவித்து உயிரைத் தன்கண் வலித்துக் கொண்டு தன்வசமாக்கிவருஞ் செய்கையில் முதல்வன் சலிப்பில்லாதவன். (தன் சந்நிதிமாத்திரையிற் செய்தலின்), விகாரப்படுவானல்லன்.

குறிப்பு:—அன்பின் மன்னும் = விருப்பத்தில் நிலைபெறும்.

நசித்தோன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்ற
நசித்திலதேல் ஒன்றவ தில்லை—நசித்துமலம்
அப்பணைந்த உப்பின் உளம்அணைந்து சேடமாம்
கப்பின்றும் ஈசன் கழல்.

உரை:—உயிர்கள் ஒரு பொருளாகிய இறைவனிற் கலக்குங்காலை, கெட்டொழியுமாயின், அவை இறைவனை ஒன்றமாட்டா. கெடுதலில்லாதிருப்பின், உயிரும் இறைவனும் இருவேறு பொருளாய் நிற்றலாமேயன்றி ஒன்றுவதில்லை. மலம் கெடப்பெற்று, நீரிற்கரைந்த உப்புப்போல உயிர் இறைவனிற் கலந்து அவனுக்கு அடிமையாம். பின் கவர்ச்சியாகிய மீளுதல் இல்லை.

குறிப்பு:—கப்பு = கவர்ச்சி, பிரிவு. சேடம் = சிறப்பு வகையால் அடிமையாதல்.

பொன்வாள்முன் கோண்மழவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே எங்குமாந் தன்மைபோல்—முன்வாள்
மலத்தின் மறைந்(து) உள்ள(ம்) மற்றுலகை உண்ணும்
மலத்(து) இரித்துச் செல்லும் வரத்து.

உரை:—கதிரவனொளி, தன் முன்னுள்ள மேக படலத்துட் புகுந்து மறைந்து, அம்மேக படலஞ் சிறிது நீங்கியவழி ஒரு புடையாய்த் தோன்றி நிலவிப் பின் மேக படலம் முழுவதும் நீங்கியபோது, எங்கும் அவ்வொளி பரவிய தன்மைபோல, உயிரும், தனது அறிவு மலத்திலே மறையப்பெற்றுக் கேவல நிலையிற் கிடந்து, பின் கருவிகளோடு கூடியகாலை ஒருபுடை அறிவு விளங்கப்பெற்று உலகப் பொருள்களை நுகர்ந்து, பின் முதல்வனருளால் மலத்தைப்பற்றறக் களைந்து வியாபக அறிவுடன் அவனது திருவடியை அணையும்.

குறிப்பு:—கொண்மூ = மேகம். ஒடுங்கி = ஒருபுடை விளங்கி. வாள் = ஒளி; அறிவு. வரத்து = வரமாகிய திருவடிக்கு.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம்(ம்) மலிந்தவர் வேடமு(ம்)
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

உரை:—அசிந்திதனைப் நின்ற பதியைச் சிந்திதனைக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. அசிந்திதன் = சிந்தைக் கெட்டாதவன். சிந்திதன் = சிந்தைக் கெட்டுபவன்.

உரை:—சீவன்முத்தன் (உடம்பில் வீடெய்தியவன்) செந்தாமரை மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது வலிய திருவடிகளை அணையவொட்டாது (மறத்தலைச் செய்விக்கும்) மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி, மறவா அன்பு செய்யும் அறிஞரோடு கலந்து மலமயக்கம் நீங்க, அன்புமிக்க அவரது திருவேடத்தையும் சிவன்கோயிலையும் முதல்வனெனவே கண்டு வழிபடுவன்.

கருத்து:—சீவன்முத்தர் உலகநிலை கூறியது.

முதல் அதிகரணம்

ஈண்டு ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்றது.

உரை:—மெய்யுணர்ச்சிக்குத் தடையாக வரும் மூம் மலங்களை நீக்குக என்றவாறு.

ஏது.—**அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.**

உரை:—அவை மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்தி, மாயா வுணர்வை மேற்படுத்தும் ஆதலால்

குறிப்பு:—அஞ்ஞானம் = நிலையா தனவற்றையறியுந் திரிபுணர்ச்சி உணர்தல் = உணர்விற்கேதுவாதல்.

புண்ணிய பாவம் பொருந்தும்இச் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
அஞ்ஞானங் காட்டும்இவ் ஆணவமும் இம்மூன்று(ம்)
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

உரை:—நல்வினை தீவினைகளுக்குப் பயனையும் காரணமாயும் பொருந்துகின்ற கன்மமலமும், நிலமுதல் அசுத்த மாயை முடிவாகக் காணப்படுகின்ற மாயாமலமும், தற்போதத்திற் கேதுவாய் நிற்கும் ஆணவமும் ஆகிய இம்மூன்று மலங்களும் மெய்யுணர்வுடைய உனக்குத் தடையாமாகலின், அவைகளைக் களைக.

குறிப்பு:—விடுவென்றது, சிவானுபவ நிலையில் உறைத்துநிற்பதால், விடுக என்றவாறு.

இரண்டாம் அதிகரணம்

இனிச் சிவபத்தரோடிணங்குக என்றது.

உரை:—சிவபத்தர் = அணைந்தோராகிய சீவன்முத்தர்.

ஏது.—**அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.**

உரை:—ஏனையோர் உலகப் பொருளுணர்ச்சியாய திரிபுணர்ச்சிக்குக் காரணராவாராகலின்.

குறிப்பு:—திருவாசகப் போற்றித் திருவகவலுள் அதனைக் காண்க.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தம்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரன்உணர்வி னால்உணரும்
மெய்த்தவரை மேவா வினை.

உரை:—சமது மெய்யியல்பை மறக்கச் செய்து, மலங்களாலாய பிறவியில் விழுத்தும் அன்பிலாரொடு பழகிய பழக்கம் அறுமாறு, அன்பர் கூட்டத்திற் பெருவிருப்புடையராய், அதன் சார்பாக விளங்குஞ் சிவஞானத்தால் முதல்வனை உணரும் மெய்த் தவத்தினரைப் பிராரத்த வினைகள் பொருந்தமாட்டா.

குறிப்பு:—மலம் = மலத்தாலாய பிறவி. சிறப்பு = அன்பு. 'அறப்பித்துப் பத்தர் இனத்தாய்' அற பத்தர் இனத்துப் பித்தாய் எனக் கொள்க.

மூன்றாம் அதிகரணம்

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக என்றது.

உரை:—வெளிப்படை.

ஏது.—அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய்நின்றே, அல்லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

உரை:—முதல்வன், இவ்விரண்டிடங்களின் மாத்திரமே (தயிரின் நெய்போல) விளங்கி நின்று, ஏனைய இடங்களிற் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்றலால்.

தன்உணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்உணரத் தன்னுள் இருத்தலால்—தன்னுணரு(ம்)
நேசத்தர் தம்பால் நிகழும் தகிரேய்போல்
பாசத்தார்க் கின்றாம் பதி.

உரை:—பரம்பொருள் தன்னை உலகினர் அறிதற் பொருட்டுத் தனது திருவேடத்தை அடியார்களுக்குக் கொடுத்து, அவர்கள் தன்னைச் சிவோகம்பாவனையால் உணரவே, தன் வியாபகத்துள் அவர்களை இருத்தி வைப்பதால், தன்னை அகண்டமாக உணரும் பேரன்பரிடத்தே தயிரில் நெய்போல விளங்குவான், பாசமுடையாரிடத்தே முதல்வன் விளங்காது நிற்பன்.

குறிப்பு:—இருத்தல் = இருத்துதல். இன்றும் = விளங்கான்.

கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தில் அங்கிவே(று)
உண்டல்போல் நின்றங்கு உளதாமால்—கண்டஉருத்
தான்அதுவாய் அன்றாறுன் தானதுவாய்த் தோன்றுனே
தான்அதுவாய்க் காணுந் தவர்க்கு

உரை நடை:—காட்டத்தில் அங்கி வேறுண்டல்போல், கண்ட உருத் தான் அதுவாய் அன்று ஆறுன். கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளது ஆம் அது தான் ஆய்க்காணும் தவர்க்கு அது தானாய்த் தோன்றுனே?

உரை:—விறகினிடத்தே கடைந்தகாலைத் தோன்றியும் அல்லாக்கால் தோன்றாலும் விறகிற்கு வேறாயுள்ள அக்கினிபோல, காணப்பட்ட திருவடிவத்தின்கட் கலந்து அதுவாகியும் அதுவல்லாமல் வேறாயும் நிற்கும் முதல்வன், அறியப்பட்டதொரு மந்திர உறைப்பால் விளங்கித் தோன்றுவன். (அஃதில்வழி விளங்கான்) அவ்வடிவையே அவனாகக் காணும் மெய்த்தவமுடையார்க்கு (மந்திர முதலியவற்றின் உதவியில்லாமலே) அவ்வண்ணமே அவன் விளங்கித் தோன்றுவானல்லனோ.?

நான்காம் அதிகரணம்

இனி, இவ்விடங்களின் வழிபடுக என்றது.

உரை:—மேற்கூறிய இடங்களில் இறைவனை வணங்குக என்றவாறு.

எது.—நரம்பு நாடி முதலானவற்றைத் தான்அதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனும் ஆகலான்.

உரை.—உடம்புள் நரம்பு, நாடி முதலிய கருவிகளில் அது அதுவாய் நிற்கும் உயிர் அவையாகாமல், தன்னின் வேறாய் நிற்றல்போல முதல்வனும் கலப்பால் எப்பொருளு மாகியும் பொருளுண்மையால், அவை அல்லனாகியும் நிற்றலால்.

குறிப்பு:—பொருள்களின் வடிவாய்க் காணுமிடத்து அவன் அவையாகியும், பொருள்களில் வேறாய்க் காணு மிடத்து இவ்விடங்களின் வேறாகியும் முதல்வன் விளங்குதலின், இருவகை வழிபாடுங் குறித்தவாறாயிற்று.

அதுஇது என்ற(து) அதுஅல்லான் கண்டார்க்(கு)
அதுஇது என்றதையும் அல்லான்—பொதுவதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமுந் தைவமே
அத்துவிதி அன்பில் தொழு.

உரை நடை:—கண்டார்க்கு, என்பதை முதலிற் கொள்க.

உரை:—முதல்வன் நிற்குநிலை யறியப்பெற்றவர்கட்கு அது இது என்ற வேறுபாட்டு நிலையும், அதுஎன்ற வேறு பாடில்லா நிலையும், அதுவாகிய இது என்ற குணகுணி நிலையும் உடையன் அல்லாமல், அறிவொளிபோல் அம் மூன்றற்கும் பொதுவாய் அத்துவிதநிலையில் நிற்றலால், எல்லாப் பொருளும் அவன் வடிவமேயாயினும், அவற் றுள்ளும் அன்பு மிகுதியாய் விளையுமிடத்தே, அத்துவித முணர்ந்தோய், நீ வழிபடுக என்றவாறு.

குறிப்பு:—தைவம்=தேவனது உடைமை. இங்கே வடிவு குறித்து நின்றது. இதனுள் சிவலிங்க வணக்கங் கூறப்பட்டதென்ப.

**வினையால் அசத்து விளைதலான் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பில் தொழு.**

உரை:—பிராரத்தவினை தாக்குமளவும், நிலையிலாப் பொருளுணர்ச்சி உளதாமாதலால், பிராரத்த வாசனை நீங்கினல் அன்றி மெய்யுணர்வு மேற்படாது. அவ்வாசனை கழிதற்பொருட்டு மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே, மெய்யுணர்வு மேம்படும். ஆகையால், அவரை அன்பால் வழிபடுக என்றவாறு.

குறிப்பு:—விளையா = விளையாது. ஞானம் = ஞானமுடையோர். ஆனதால் - ஆனத்தால் என விரிந்தது. இதனுள் அடியார் வணக்கங் கூறப்பட்டதென்ப.

தன்னை அறிவித்துத் தான்தானச் செய்தானைப்
பின்னை மறந்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.

உரை:—தன்னுண்மையை அறியமாட்டாது குருடாயக்கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரிவித்து, அவ்வுயிரைத் தான் ஆகும் வண்ணஞ் செய்தருளியவனை அவ்வுபகாரத்தின் பின்னர் மறத்தல் (பரிகாரமில்லாத) குற்றமாவதோடு, முதல்வன் அப்படி உயிரைத் தானகவே செய்தாலும், முதல்வனுதவியை இன்றியமையாத அடிமையாகிய உயிர் அவனுக்கு எக்காலத்தும் அடிமையே யாதலால், அப்பெரியோனை வழிபடுதலே உயிர்க்கு வலிமையளிப்பதாகும்.

குறிப்பு:—மானே = மகானே. பெரியோனே = பெரியோனையே - இரண்டாம்வேற்றுமைத் தொகை. இதனுட் குருவணக்கம் கூறப்பட்டதென்பர்.

சிவமென்னும் அந்தரர சிந்தைநேர் நோக்கப்
பவம்இன்றும் கண்வா சகத்திற்—சிவம் உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்(கு) இங்(கு) ஒண்தருவால்
இன்(று) இந்நூல் மும்மை மலர்க்கு.

உரை:—சீவன் என்ற இயல்பு நீங்கிச் சிவம் என்றோதப் படுஞ் சித்தாந்தத்தை யுடையவனே! ஒரு மலம் இரு மலம் உடையார்க்கு, முறையே அறிவின்கண் நின்று நேரே திருவருட் பார்வையால் நோக்குவதாலும், நேரே தேவவடிவோடு வந்து பார்த்தலாலும் சொல்லுதலாலும், பிறவிக் கேதுவாய பசுத்துவம் நீங்கும்; சிவத்துவம் உண்டாம். மூன்று மலமுடையார்க்கு இவ்வுலகில் அனுபவமுடைய தேசிகரால், அவை நிகழும். இந்நூல் மும்மலமுடைய சகலர்க்கே பக்குவமுறும் இக்காலத்து உரியதாகும்.

குறிப்பு:—அந்தகர = மேலான முடியுடையவனே. பவம் = பிறவி. இங்கே, பிறவிக்கேதுவாய பாசம். சிவம் = சிவத்துவம். இன்று = பக்குவகாலத்து. ஒண் = அனுபவமுடைய.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து

முதற்சூத்திரத்தில்-சகம் பிறப்புஇருப்பு இறப்பாகிய முத்தொழிலை
யுடையது. (க)
அது அரனாலே யுடையது. (உ)
மற்றிருவரும் முத்தொழிற்படுவார்கள். (ங)

உ - ல் அரன் உயிர்களி லிரண்டற நிற்பன். (க)
உயிர்களுக்குக் கன்ம பலனை அரனே கொடுப்பன். (உ)
உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும். (ங)
அரன் சருவ வியாபகன். (ச)

ங - ல் இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே
அறி உயிருண்டு. (க)
எனதுடலென்ற பொருட் பிறிதின்கிழமையாகச்
சொல்லுகையினாலே உடற்கு வேறாயுயிருண்டு. (உ)
ஐந்தையு மொருவனே யறிதலி னவ்வொன்றை
மாத்திர மறிகின்ற ஐந்திற்கும் வேறாயுயிருண்டு. (ங)
கனவுடலைவிட்டு நனவுடலின்மேல் வருகையினாலே
கனவுடலுக்கு வேறாயுயிருண்டு. (ச)
நித்திரையிலும் பிராணவாயுத் தொழிற் பண்ண
வுஞ் சரீரத்திற்குப் புசிப்புந் தொழிலுமில்லாத
படியினாலே பிராண வாயுவுக்கு வேறாயுயிருண்டு. (ரு)
மறந்து மறந்து நினைக்கின்றபடியினாலே மறவாம
லிருக்கிறவனுக்கு வேறாயுயிருண்டு. (சு)
எல்லாத் தத்துவங்களுக்கும் வெவ்வேறு பெய
ரிருக்கிறபடியினாலே அந்தத் தத்துவங்களுக்கு
வேறாயுயிருண்டு. (எ)

ச - ல் அந்தக்கரணங்களுக்கு உயிர் உள்கூடினாலன்றித் தொழிலில்லாத படியினாலே அந்தக்கரணங் களுக்கு வேறாயுயிருண்டு. (க)
மலமறைப்பா லுயிர்க்கு அறிவில்லை. (உ)
உயிர் மூன்றவத்தைப்படும். (ங)
ரு - ல் உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும். (க)
அரனாலே வுயிர்களெல்லா மறியும். (உ)
சு - ல் உயிரறிவினாலே யறியப்பட்டவெல்லாம் அழியும். (க)
அப்பிரமேயமாக அறியப்பட்டவனே யரன். (உ)
எ - ல் அரன் பாசத்தை யனுபவியான். (க)
பாசம் அரனை யனுபவியாது. (உ)
உயிர் அவ்விரண்டினையும் அனுபவிக்கும். (ங)
அ - ல் உயிர்க்கு நல்லறிவு தவத்தினாலே வரும். (க)
உயிர்க்குச் சற்குருவாய் வருவது அரனே. (உ)
உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது. (ங)
உயிர் பஞ்சேந்திரியங்களிற் பற்றற்றால் தன்னையும் அறியும். (ச)
கூ - ல் உயிர் அரன்ஞானத்தினாலேயே அரனைக் காணும். (க)
உயிர் பாசத்திலே பற்றற்றால்அரன் வெளிப்படுவன். (உ)
பஞ்சாட்சர செபம் பண்ணினால் வாதனாமலம்போம். (ங)
க0 - ல் அரனுடன் ஒன்றாகி நில். (க)
உன்தொழிலெல்லாம் அரன்பணியென்றேகொள். (உ)
கக - ல் ஞானிக்கு வருகின்ற விடயங்களை அரனே யனுபவிப்பன். (க)
அரனைமறவாமல் அன்பிருந்தால் அவ் அரனிடத்திலே ஐக்கமாய்ப் போவன். (உ)
கஉ - ல் மும்மலங்களையுங் களைக. (க)
சிவஞானிகளுடனே கூடுக. (உ)
சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனென்றே தேறி வழிபடுக. (ங)
வழிபடாமையை யொழிக. (ச)

[இது திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப்பிள்ளையார் அருளிச் செய்ததாக ஆன்றோர் வழக்கில் கூறப்படுகிறது.]

சிவமயம்

சிவஞானபோதத்தைப்பற்றிப் பிற்காலத்தவரால் செய்யப்பட்ட

செய்யுள்கள்

நூற் சிறப்பு

வேதம் பசுஅதன்பால் மெய்ஆ கமம்நால்வர்
ஓதுந் தமிழ்அதனின் உள்ளுறுநெய்—போதமிகும்
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

நூற் கருத்து

முதற்பதி அரனே ஐந்து முன்னத்து விதமி ரண்டே
இதற்பினே யனுமா னத்தால் எண்ணிலா வுயிர்கள் மூன்றே
அதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே ஐந்தே
செகற்பதி பிரித்த லாறே தெரிவித்த லுயிரை யேழே.

மறைப்பினை நீக்கி ஞான வாரியை நினைத்தல் எட்டே
சிறப்புடை உபாயந் தம்மால் தெளிவித்தல் உயிரை ஒன்பான்
அறுத்திடல் மலஙகள் பத்தே அழுந்தலே சிவத்தில் ஒன்றே
திறப்பணி கொளல் இரண்டே சிவஞான போதஞ் சித்தி.

பதினான்கு சாத்திரம்

உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தஅருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் முற்று.

சிறப்புப் பாயிரம்

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளில் கண்டுகண் ணிருள்தீர்ந்து

அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவர்அடி புனைந்த தலைமை யோனே.

மெய்கண்டதேவர் துதி

சிறிய ஆடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவுநூல்களின் முடிபெலாம் அகப்படுத் தவற்றின்
நெறியெலாம் விளக்கிய சிவஞான போதத்தைக்
குறிசெய்தீந் தமிழால்உரை குரவனைப் பணிவாம்.

மூன்று மலங்கெடுத்து மூலமாம் அப்பொருளுந்
தோன்ற அருளுந்தன் தொண்டர்க்கிங் — கான்றமைந்தோர்
கைகண்ட தன்மை கடன்ஞாலத் தெப்பொருட்கும்
மெய்கண்ட தேவன்விரைத் தாள்.

நான்மறை

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞானநூல் — சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நிலையம்
அடையாறு, சென்னை

பாட்டு முதற்குறிப்பகராதி

நாவல் - ச. வே. நரசையர் இயற்றியது

"இந்த நவீன நற்போத நாவல் செந்தமிழ் நடையில் எழுதப்பெற்று ஸாதாரணமான கலவியறிவு படைத்த சிறுவர் சிறுமிகளுக்கும் எளிதில் பொருள் விளங்கக்கூடியதாயும், வாசிப்போர்க்கு நல்லறிவு நன்மார்க்கங்களைப் போதிப்பதாயும், தமது ஓய்வுகாலங்களைப் பயன்படச் செலுத்தக் கருதுவோர்க்குத் தாகுந்ததாயும் இருக்கின்றது.

இப்புஸ்தகம் சென்னைக் கவர்ன்மெண்ட்டப் பல ராஜாங்க உத்தியோகஸ்தர்களாலும், அநேக வித்துவான்களாலும், நாட்டுச் சீமான்கள் பல்லோராலும், பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களாலும் நற்சாக்ஷி பத்திரங்கள் மூலமாய்க் கொண்டாடப்பட்டுப் பாடசாலை மாணுக்கர்க்குப் பாடபுஸ்தகமாகத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதில் அடங்கியிருக்கும் விஷயங்களிற் சிலவாவன:—

1. செல்வமும் வறுமையும்: அவற்றின் நன்மைதீமைகளும் 2. நல்லார் நட்பும் தீயார் தொடர்பும்: அவற்றின் பெருமை சிறுமைகளும் 3. பெண்கள் கல்வியும் கற்பின் நிலைமையும்: அவற்றின் ஏற்றமும் 4. இல்லறமும் துறவறமும்: அவற்றின் முறைகளும் 5. நற்குணமும் நன்னடக்கையும்: அவற்றின் சிறப்பும் 6. பொறுமையும் சீற்றமும்: அவற்றின் உயர்விழிவுகளும் 7. காதல், களவுடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல்மறுத்தல் முதலிய துர்க்குணங்களும்: அவற்றின் கேடுகளும் 8. மாணுக்கரும் நாட்டினரும்: அவர்களின் கடமை உரிமைகளும் 9. அரசிறையும் ராஜாபிமானமும்: அவற்றின் அபிவிருத்திக் கேற்ற ஒழுக்கங்களும் 10. ஐங்குரவர் பக்தியும் அதன் மேன்மையும்.

மேற்கூறியவை போன்ற இன்னும் பற்பல விதமான நற்போதனை விஷயங்களைப் பற்றிய உபந்யாஸங்கள் புஸ்தகத்தின் இடையிடையே சமயத்திற் கேற்றபடி அடங்கியுள்ளன; கதாஸந்தர்ப்பத்திற் கேற்ப ஆங்காங்குச் சேர்த்துள்ள நற்போதனை விஷயங்களின் உண்மைகளை வெளிக்காட்டி வாசிப்போர்க்கு நன்னெறிகளை வற்புறுத்-